விலை ரூபா 7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-8

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | மாசி -25 | 08-03-2004 | திங்கட்கிழமை | ஓசை-019




# தனது தவறுகளை மூடிமறைப்பதற்காகவே கருணா பிரதேச வாதத்தைக் கிளப்புகிறார்!



## மட்டு -அம்பாறை சிறப்புத்தளபதி ரமேஸ் குற்றச்சாட்டு

(கிளிநொச்சி)

**கருணா தனது தவறுகளை மூடிமறைப்பதற்காக ஒரு பிரதேச வேறுபாட்டினைத் தோற்றுவித்து போராளிகளே இந்த முடிவை எடுத்ததாகவும், மாவட்டம் இந்த முடிவை எடுத்ததாகவும் காட்டுவதற்கு முற்பட்டுள்ளார். இதற்காக போராளிகளைக் கட்டாயப்படுத்தி ஆயுத முனையில் அங்கு பல வேலைகளை மேற்கொள்வதாக எங்களுக்கு தகவல் வந்துள்ளது என மட்டு-அம்பாறை விசேட தளபதி ரமேஸ் தெரிவித்தார்.**

ஈழநாதம் நாளேட்டிற்கு நேற்று வழங்கிய செவ்வியில் மேலும் அவர் தெரிவித்ததாவது;

தற்போதைய சூழ்நிலையில் கிழக்கு மாகாணமக்களதும் போராளிகளினதும் மன உணர்வு எப்படி உள்ளது என்பது பற்றித் தெரிவிக்க முடியுமா?

நேற்று முன்தினம் கிளிநொச்சியில் இடம்பெற்ற மாநாட்டின் பின்பு நாங்கள் மட்டக்களப்பு

(8ஆம் பக்கம் பார்க்க)

## சிறைச்சாலை மோதலைத்தடுக்க பாதாளஉலகத்தவர் சிறைமாற்றம்

வெலிக்கடை சிறையில் மேலும் மோதல்களைத் தடுக்க பாதாள உலக குழுத் தலைவர்களை சிறை மாற்றப்பட்டுள்ளது. இதுவரை ஒருவர் களுத்துறைக்கு மாற்றப்பட்டுள்ளார். இருதினங்கள் இடம்பெற்ற மோதலில் 50பேர் வரை காயமடைந்துள்ளனர். மேலும் மோதல்களை தடுக்க அங்கே கலகத் தடுப்புபொலிசார் கடமையில் ஈடுபட்டுள்ளனர். (32)

## சர்வதேச மகளிர் தினமான இன்று பல்வேறு நிகழ்வுகளுக்கு ஏற்பாடு

இன்று சர்வதேச மகளிர் தினமாகும். இதனை முன்னிட்டு பல எழுச்சி நிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்யபட்டுள்ளன. கிளிநொச்சியில் பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனம் நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்துள்ளது.

அத்துடன் உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவனம் நிகழ்வுகளை ஏற்பாடுசெய்துள்ளது.யுத்த எதிர்ப்பு முன்னணி என்ற அமைப்பினால் இன்று மன்னாரில் ஆர்ப்பாட்டப்பேரணி ஒன்று நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்டத்தில் பெண்கள் அமைப்புக்கள் பல இணைந்து எழுச்சிப்பேரணிகள் விழிப்புணர்வு கூட்டங்கள் என்பவற்றை ஏற்பாடு செய்துள்ளதுடன் யாழ். பரியோவான் கல்லூரி மைதானத்தில் விசேட நிகழ்வும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. (33)

## கூட்டமைப்புக்கு ஆதரவுவழங்க யாழ். பொது அமைப்புகள் தீர்மானம்

எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடும் தமிழ் தேசியக்கூட்டமைப்பினருக்கு யாழ். மாவட்ட சிற்றூர்திகள் உரிமையாளர் சங்கம், மற்றும் முச்சக்கர வண்டி உரிமையாளர் சங்கங்கள் இணைந்து தமது முழு ஆதரவையும் வழங்கத்தீர்மானித்துள்ளன.

தேர்தல் சம்மந்தமாக கலந்தாலோசிக்கும் முக்கிய மாநாடொன்றை இரண்டு சங்கங்களினதும் பிரதிநிதிகள் நடத்தினர் நேற்று யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்ற இச்சந்திப்பில் யாழ்.மாவட்ட அரசியல் துறை பொறுப்பாளர் இளம்பரிதி தமிழீழ திட்டமிடல் பொறுப்பாளர் தூயவன் மற்றும் கூட்டமைப்பு வேட்பாளர்கள்பலரும் கலந்து கொண்டு தமிழ்தேசியக்கூட்டமைப்பினர்களது கொள்கைகள் தொடர்பாக விரிவாக விளக்கினர் இதனைத் தொடர்ந்து தமிழ் மக்களுடைய அபிலாசைகளை பிரதிபலிக்கும் விதமாக போட்டியிடும் கூட்டமைப்பினருக்கு முழு ஆதரவையும் வழங்குவோம் என முச்சக்கர வண்டி மற்றும் சிற்றூர்தி உரிமை யாளர்கள் தீர்மானித்துள்ளனர். (33)

## படைமுகாமிற்குள் திடீர் வெடிவிபத்து

ஜனமுல்ல இராணுவ முகாமினுள் நேற்று வெடிவிபத்தொன்று ஏற்பட்டுள்ளது.

இராணுவ கொமாண்டோ படைமுகாமினுள்இவ் விபத்து ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த விபத்துக்கான காரணம் எதுவும் குறிப்பிடப்படவில்லை.

## விருப்பு வாக்கு கோருவதால் ஜே.வி.பி-சு.க. முரண்பாடு

(கொழும்பு)

குருநாகல் மாவட்டத்தில் விருப்பு வாக்குகள் யாருக்கு என எழுந்துள்ளசர்ச்சையால், ஜே.வி பி.யினருக்கும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியினருக்குமிடையே முரண்பாடு எழுந்துள்ளது.

குருநாகல் மாவட்டத்தில் மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக ஆறு வேட்பாளர்களுடைய பெயர்கள் பிரேரிக்கப்பட்டுள்ளன.

மக்கள் ஐக்கியசுதந்திர முன்னணி சார்பில் ஜே.வி.பி. யைச்சார்ந்த மூன்று பேரும், சிறிலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் மூன்று பேரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

வழமையான தேர்தல் பிரச்சாரங்களின் போது ஜே.வி.பி.யினர் தமது கட்சியினருக்கு விருப்பு வாக்கு இடுமாறு கோருவதில்லை ஆனால் இம்முறை தமது வேட்பாளருக்கு வாக்களிக்க கோரி வருகின்றனர். இதனால் சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர் குழப்பமடைந்துள்ளனர்.இவ்வாறு ஜே.வி.பி.யினர் விருப்பு வாக்குகளை போட முற்பட்டால் தமது கட்சிக்கு பாதிப்பாகஅமைந்துவிடும் என சு.க.கூறுகின்றது.இதனால் விருப்பு வாக்குகளை எவருக்கும் இடவேண்டாம் எனக்கோரிவருகிறது.

## தாய்லாந்து யுத்தக்கப்பல் வருகை 10,000 சிறில.படையினருக்குப் பயிற்சி

தாய்லாந்து யுத்தக்கப்பல் நேற்று இலங்கை வந்துள்ளது. பின்னர் இன்றுதிரும்பிச் செல்லும். இதில் 500ற்கு மேற்பட்டகடற்படையினர் வந்துள்ளனர். சிறிலங்கா கடற்படைக்கும் தாய்லாந்து கடற்படைக்கும் இடையில்உறவை விருத்தி செய்து கொள்ள இருக்கிறது. இந்தக் கப்பலின் மூலம் சிறிலங்கா கடற்படையினர் 10,000 பேருக்கு பயிற்சிவழங்கப்படவிருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

## வேலைநிறுத்தம் முடிவுக்கு வந்தது

வடமேல் மாகாண தாதியர் வேலைநிறுத்தம் முடிவுக்கு வந்திருக்கிறது. கடந்த 3நாட்களாக இந்த வேலை நிறுத்தம் நடந்து கோதாகொட சம்பள பரிந்துரையை நடைமுறைப்படுத்தக் கோரியே இந்த வேலைநிறுத்தம் நடைபெற்றுள்ளது. (32)

## தேர்தல் வன்முறைகள் 236 ஆக அதிகரிப்பு

பொதுத்தேர்தல் தொடர்பான வன்முறைகள் தொடர்ந்தும் அதிகரித்து வருகின்றன. நேற்றுக் காலை ஆறு மணியுடன் முடிவடைந்த இருபத்து நான்கு மணித்தியாலயத்துக்குள் 18 தேர்தல் வன்முறை முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன .

தேர்தல் வன்முறைகள் தொடர்பான காவல்மையம் இந்த அறிவித்தலை விடுத்துள்ளது.

இந்த வன்முறைகளுடன் சேர்ந்து தேர்தல் வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்த தினத்திலிருந்து இடம்பெற்ற வன்முறைகளின் தொகை 236 ஆக உயர்ந்துள்ளது. (32)

# மக்களையும், போராளிகளையும் பலிக்கடாவாக்கின் "பொல்பொட்டாக" கருணாமாறும் நிலைவரலாம்!

## மூத்த உறுப்பினர் கரிகாலன் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

ஒருதனிமனித பிரச்சினைக்காக மக்களை பலிக்கடாக்களாக்கி ஆயிரக்கணக்கான போராளிகளையும் பலிக்கடா வாக்கு



வாராகவிருந்தால் கருணா ஒரு" பொல்பொட்" ஆகமாறுவார் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை.

இவ்வாறு நேற்றுப் பகல் கிளிநொச்சி அரசியல்துறை நடுவப் பணியகத்தில் வைத்து மூத்த உறுப்பினர் கரிகாலன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.அவர் மேலும் தெரிவிக்கையில்,

அண்மையில் மட்டக்களப்பில் நடைபெற்ற பொங்குதமிழ் நிகழ்வில்கூட புலிகளே தமிழர், தமிழரே புலிகள் என்ற தேசியத் தலைவரின் உருவப்படத்தினை தாங்கிச் சென்ற பல்லாயிரக் கணக்கான மக்களின் மனதிலே இருக்கின்ற அந்த நினைவையும், அந்த உணர்ச்சியான தலைவரினுடைய பற்றையும் ஒருபோதும் அழிக்க முடியாது.

தற்பொழுது மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களிலே ஏற்படுத்தப்பட்டிருக்கின்ற கருணாவுடைய பிரிந்து போகின்ற இந்த முடிவுவந்து தன்னிச்சையாக அவரினால் மாத்திரம் எடுக்கப்பட்ட முடிவு. எந்தவொரு தளபதிகளையோ பொறுப்பாளர்களையோ, கலந்தாலோசிக்காமல் தானாக எடுத்த முடிவுக்கு போராளிகளையும் பொறுப் பாளர்களையும் செயற்பட வைத்திருக்கின்றார். இது நிச்சயமாக வெற்றியளிக்கப் போவதில்லை.

அதேவேளையில் இந்த முடிவு எடுப்பதற்கு அவருக்கு ஒரு பின்புலமும் இருப்பதாகவும் நாங்கள் யூகிக்கிறோம். அவை என்ன என்பதனை நீங்கள் காலப் போக்கிலே புரிந்து கொள்வீர்கள் என நினைக்கிறேன்.

இன்றைக்கு தமிழ் தேசியத் தலைமையை வெறுத்து எந்தவொரு மட்டக்களப்பு- அம்பாறை மக்களும் செயற்படத்தயாராக வில்லை என்பதை நாங்கள் உறுதியாகக் கூறிவைக்க விரும்புகிறோம்.

ஏனெனில் இந்த இருபத்தைந்து வருடப் போராட்ட காலத்திலே, தேசியத்தலைமையையும் தமிழ்த் தேசியத்தையும்

(8ஆம் பக்கம் பார்க்க)

# தமிழீழ வைப்பகம்

## பணிநிலை வெற்றிடம்

தமிழீழ வைப்பகத்தினால் கீழ்க்காட்டப்படும் பணி நிலைக்குத் தகுதியானவர்களிடமிருந்து வேண்டுகை கள் கோரப்படுகின்றன.

பணிநிலை:- பாதுகாப்பு உதவியாளர் (அமைய அடிப்படை)

தகைமைகள்:-
I. 10 ஆம் தரத்தில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
II. நல்ல உடல் வலுவும், தேக ஆரோக்கியமும் உடையவராக இருத்தல் வேண்டும்.
III உயரம் 5'5"இற்குக் குறையாமலும், நெஞ்சுச்சுற்று 32"இற்குக் குறையாமலும் இருத்தல் வேண்டும்.
IV. ஆண்பாலார் மட்டும்.
V. கராத்தே போன்ற தற்காப்புக் கலைகளிற்கானசான்றிதழ்கள், உடற்தகைமையை உறுதிசெய்யும் சான்றிதழ்கள என்பவற்றைக் கொண்டுள்ளவர்களிற்கு முன்னுரிமை வழங்கப்படும்.

அகவை எல்லை:- 28-35 வருடங்கள்.

ஊதியம:- நாளொன்றுக்கு உருபா நூற்று எழுபத்தைந்து (உருபா175)

வேண்டுகையர்கள் சொந்தக் கையெழுத்தில் எழுதப்பட்ட தன்விளக்கங்கள் (சுயவிபரம்) அடங்கிய படிவத்துடனும், தேவையான ஆவணங்களுடனும் வரும் 2004.03.10 ஆம் நாள் புதன்கிழமை பி.ப.1.00 மணிக்கு திருநகர் கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழீழ வைப்பகம் நடுவப்பணியகத்திற்குப் பின்வரும் ஆவணங்களுடன் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

★ பிறப்புச் சாட்சிப்பத்திரம் (மூலம்,படி)
★ தேசிய அடையாள அட்டை (மூலம், படி)
★ கல்வித்தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள் (மூலம், படி)
★ ஏனைய தகைமைகளை வெளிப்படுத்தும் சான்றிதழ்கள்.
★ கிராம அலுவலரின் நற்சான்றிதழ்.

(சி-9408)

மேலாளர்,
ஆளுகைப்பகுதி,
நடுவப்பணியகம்,
தமிழீழ வைப்பகம்.



வட்டக்கச்சிப் பிரதேசத்தின்

# முதல் எல்லைப்படை மாவீரன்

## வீரவேங்கை சிவா

உட்பட
அனைத்து மாவீரர்களையும்

## நினைவு கூருகிறோம்

| | |
|---|---|
| கப்டன் தினேஸ் | வீ.வே. தரன் |
| லெப். சுரேஸ் | வீ.வே. சங்கர்/குட்டி |
| கப்டன் ரகீம் | வீ.வே. அப்பன் |
| 2ம்லெப். செல்வேந்திரன் | வீ.வே. பாலன் |
| 2ம்லெப். ஜெயம் | வீ.வே. குமார் |
| கப்டன் மாமா | வீ.வே. குணம் |
| வீ.வே. பாபு | வீ.வே. சிவா |
| வீ.வே. சுதாகரன் | வீ.வே. செல்வன் |
| வீ.வே. பாபு | வீ.வே.செல்வன்/கருணாகரன் |
| வீ.வே. சேகர் | |
| வீ.வே. தயா | வீ.வே. வினோ |
| வீ.வே. சௌந்தரராஜ் | 2ம்லெப். சிந்து |
| வீ.வே. ரங்கன் | வீ.வே. முரளி |
| லெப். உதயன்/இமையன் | |
| வீ.வே. விஜயன் | |
| வீ.வே. பெரியதம்பி | |
| கப்டன் பரசுராமன் | |

தகவல்:-
வட்டக்கச்சிப் பிரதேச,
தே.எ.பேரவை,
வர்த்தக சங்கம்,
வ.ம.அரசியல்துறை.

(4302)



## வரி விளம்பரம்

**வேந்தன் பல்கட்டும் நிலையம் கிளிநொச்சி**

பல்கட்டுதல், மிதப்பு பற்களுக்கு கிளிப் போடுதல் என்பவற்றை சிறந்த முறையில் செய்து கொள்ள மத்திய கல்லூரி மைதானம் முன்பாக வேந்தன் பல் கட்டும் நிலையம், யாழ் கண்டி சாலை, ஆனந்தபுரம். (சி.9319)

**வயல்காணி விற்பனைக்குண்டு**

கிளி. 4ஆம் வாய்க்காலில் இருபோகம் நீர்ப்பாசன வசதியுள்ள வயல்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு முகவரி:- இல.61-கணேசபுரம் கிளிநொச்சி.

(4298)

**பொது அறிவுத் தகவல்கள்**

எதிர்வரும் ஆசிரியர் தெரிவுப் போட்டிப் பரீட்சைக்கான திருமதி மேரி ஜேசுதாசனின் மிகச் சமீபகால உள்நாட்டு, வெளிநாட்டு விடயங்கள் அடங்கிய 'பொது அறிவுத் தகவல்கள்' நூல் வெளிவந்து சகல புத்தகக் கடைகளிலும் விற்பனையாகிறது.

(4229)


## புத்தளத்தில் பலத்த பாதுகாப்பு

புத்தளம் நகரில் அதிகரித்து வரும் தேர்தல் வன்முறைகளைக் கட்டுப்படுத்த பலத்த பொலிஸ் பாதுகாப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

நகரிற்குள் சந்திக்குச் சந்தி பொலிசார் இரவு பகலாக பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

புத்தளம் நகரிலுள்ள அரசியல்வாதிகளின் இல்லங்கள், கட்சிக் காரியாலயங்கள் என்பன பலத்த பாதுகாப்புக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

தேர்தல் காலத்தில் சட்ட விரோத ஆயுதங்கள் பயன்படுத்தப்படலாம் எனும் மக்களின் அச்சம் காரணமாகவே பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக பொலிசார் கூறியுள்ளார்கள்.

## சம்பள முரண்பாடு

(கொழும்பு)

கற்பித்தல் சேவை கடுமையான சம்பள முரண்பாட்டை எதிர்நோக்குவதாக சிறிலங்கா ஆசிரியர் சேவைச்சங்கம் தெரிவித்துள்ளது.

பல்வேறு சம்பள முரண்பாட்டுக் குழுக்களின் சிபாரிசுகளே இந்த நிலைமைக்கு காரணம் என்று சங்கத்தின் பொதுச் செயலாளர் மகிந்த ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

## விழிப்புணர்வு கருத்தரங்கு

(அலுவலக செய்தியாளர்)

தருமபுரம் மக்களுடனான சமூகவிழிப்புணர்வுக் கருத்தரங்கு கடந்த 5ஆம் திகதியன்று காலை 10.00 மணிக்கு தருமபுரம் மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

தருமபுரம் மகாவித்தியாலய அதிபர்தலைமையில் நடைபெற்ற மேற்படி கருத்தரங்கில் தமிழீழ காவல்துறை வாகன போக்குவரத்துப் பிரிவு பொறுப்பாளர் கனகலிங்கம் காவல்துறை கிளி.மாவட்ட கண்காணிப்பாளர் கண்ணாளன் ஆகியோர் கலந்து கொண்டு மக்கள் மத்தியில் சமூக விழிப்புணர்வு கருத்துரைகளை வழங்கியதுடன் மக்கள் கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகளையும் தெளிவுபடுத்தினர்.

இக்கருத்தரங்கில் தருமபுரப் பிரதேசத்தின் பெருமளவு மக்கள் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (சோ)


# பாராட்டி வாழ்த்துகின்றோம்



மல்லிகைஅம்மன் ஆலய பொருளாளராகவும்,நகேந்திரா விளையாட்டுக்கழக பொருளாளராகவும் இருந்து, நாகேந்திரபுர க.தொ.கூ.சங்க பொருளாளராகவும் இருந்து, நாகேந்திரபுர சமூக பொருளாதார அபிவிருத்திக் குழுத்தலைவரும்,கரைச்சி வடக்கு க.தொ.கூ.சங்கங்களின் சமாச செயலாளராகவும் சேவையாற்றிக் கொண்டிருக்கும் இராசதுரை சந்திர மவுலீசன் அவர்கள் யாழ்ப்பாண நீதிமன்றத்தில் நீதிபதி திருமதி நந்தசேகரன் முன்னிலையில் 12.02.2004அன்று சமாதான நீதவானாக சத்தியப் பிரமாணம் செய்துகொண்டதைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

மாதர் கிராமஅபிவிருத்திச் சங்கம்,
நாகேந்திரபுரம்.

(சி.9325)



# அனைத்துலக மகளிர் தினம் மார்ச் 08

பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனமும் ஒக்ஸ்பாம் நிறுவனமும் வெளியிடப்படும் துண்டுப்பிரசுரம்.

## என் அன்புச் சகோதரனே! சகோதரியே!

சற்றுநேரம் நான் கூறுவதைச் செவிமடுப்பாயா? உன்னைப் போன்றே ஒரு தாயின் வயிற்றில் தோன்றி பெண் என்ற காரணத்தினால் பல்வேறு அச்சுறுத்தல்களுக்கும், அடிமைத்தனங்களுக்கும், துன்பங்களுக்கும், சுரண்டல்களுக்கும் கொடுமைகளுக்கும் ஏன் சித்திரவதைகளுக்கும், பாலியல்வல்லுறவுகளுக்கும், கொலைகளுக்கும் கூட உள்ளாக்கப்பட்டிருக்கும் ஒருத்தியின் கதறல் இது.

இந்தச் சமூகத்தில் எனக்கு மட்டும் ஏனிந்த நிலை? எனக்கு மட்டும் ஏனிந்தத் தடைகள் என் வாழ்க்கையை நான் தீர்மானிக்கத் தடை! திருமணம் செய்ய சீதனம் தடை! திருமணம் செய்தால் முடிவெடுக்கத் தடை! விதவையானால் பொட்டுக்குத் தடை! எனது சொத்துக்களை நான் அனுபவிக்கத் தடை! எங்கும் தடை! எதிலும் தடை!

இதுமட்டுமா? ஒரே வேலை ஆனாலும் நான் பெறுவதோ ஒரு சொற்ப கூலியே. அலுவலகத்தில் கூட பாரபட்சம் தான் என் வீட்டிலும் கூட எனக்குப் பாதுகாப்பில்லை. அங்கும் வன்முறை. ஐந்து வயதிலும் பெண்கள் என்றால் ஒரு பொருளாகப் பார்க்கும் கொடுமை. மலர முன்பே கசக்கி வீசப்பட்ட மொட்டுக்கள்தான் எத்தனை? ஏன் நான் குடும்பப் பெண்ணாகவோ கூட இருக்கலாம். இன்று கூட நான் அதிக வேலைப்பளுவிற்கு ஆளாக்கப்பட்டுக் கொண்டு இருக்கின்றேன்.

இந்த உலகம் முழுவதும் நான் பிரச்சினைக்கு முகம் கொடுக்கும் அதேவேளை ஓர் இரண்டாந்தரப் பிரசையாகவே நடாத்தப்படுகின்றோம். பெண்களுக்கும் ஆண்களுக்கும் ஓர் சமத்துவமான ஓர் உலகமே எமக்குத் தேவை.

*" இன்றுடன் இவற்றை நிறுத்தி இனியாவது ஒன்று சேர்ந்து என் வாழ்வை வளமாக்க முன்வரமாட்டீர்களா"*

இப்படிக்கு
உன் தாய்,சகோதரி,மகள்
மார்ச-08 சர்வதேச பெண்கள் தினம்.

"பெண்களுக்கு எதிரான சகல பாகுபாடுகளையும் அணிதிரண்டு களைவோம்"

**பெண்களின் உரிமைகளும் மனித உரிமைகளே**

பிரசாரம்:- பெண்களுக்கெதிரான சகல வன்முறைகளுக்கும் எதிராக

ஒக்ஸ்பாம் பெண்கள்' அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனம்.

(4300)

# இஸ்ரேலிய படையினர் வெறியாட்டம்

# 3 பலஸ்தீனர்கள் பலி; பலர் படுகாயம்!

## காஸாவில் தாக்குதல் முயற்சிக்கு பதிலடி

**பலஸ்தீனத்தின் காஸாப் பகுதியிலுள்ள பலஸ்தீன அகதி முகாமினுள் நேற்றுக்காலை இஸ்ரேலியத் துருப்புக்கள் மேற்கொண்ட கண்மூடித்தனமான தாக்குதலில் மூன்று பலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டதுடன் பலர் படுகாயமடைந்துள்ளனர்.**

நேற்றுக்காலை இடம்பெற்ற இத்தாக்குதலில் பத்திற்கும் மேற்பட்ட கவசவாகனங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.


இத்தாக்குதல் ஒரு பழிவாங்கும் நடவடிக்கையாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக காஸா எல்லையில் இஸ்ரேலிய இராணுவ ஜீப் போன்று வடிவமைக்கப்பட்ட இரண்டு ஜீப் வண்டிகளில் சென்று இஸ்ரேலிய இராணுவமுகாம் ஒன்றின் மீது தற்கொலைத் தாக்குதல் நடத்த முயன்ற பலஸ்தீன போராளிகளின் முயற்சி முறியடிக்கப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இதன்போது இந்த ஜீப் வண்டிகள் மீது இஸ்ரேலியப்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதில் அந்த ஜீப் வண்டிகள் வெடித்துச் சிதறியதில் அதில் இருந்த ஆறு பலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கமாஸ் இயக்கம், இஸ்லாமிய ஜிகாத் இயக்கம், அல்அக்ஷா ஆகிய மூன்றும் இணைந்து நடத்த முற்பட்ட இந்தத் தாக்குதல் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இஸ்ரேலுடன் யுத்த நிறுத்தத்தைக் கடைப்பிடிக்குமாறு பலஸ்தீன அதிகாரசபை விடுத்த வேண்டுகோளையும் நிராகரித்துவிட்டு இந்த இயக்கங்கள் கூட்டுச் சேர்ந்து நடத்திய இந்தத் தாக்குதலினால் காஸா பிரதேசத்தில் இருந்து வெளியேறுவது என்ற இஸ்ரேலின் உடன்பாட்டிற்குக் குந்தகம் விளைவிக்கலாம் என அமெரிக்கா அச்சம் தெரிவித்துள்ளது.



இயந்திரத் துப்பாக்கிகள் பொருத்திய அமெரிக்க ஹம்வீஸ் கவச வாகனங்களில் அமெரிக்கப் படையினர் கெயிட்டியில் பாதுகாப்புப் பணியில் ஈடுபடு கின்றனர்.



பலஸ்தீன தீவிரவாதிகளின் தாக்குதலை தடுக்கும் வகையில் இஸ்ரேலினால் மேற்குக்கரையில் அமைக்கப்பட்டு வரும் பாதுகாப்புச் சுவரின் ஒரு பகுதியினுடைய தோற்றம்.

# ஷியா இனப்பிரிவின் அங்கீகாரம் பெற ஈராக் ஆளும்சபை தீவிர முயற்சி

ஈராக்கில் ஆளும் சபையைச் சேர்ந்த தூதுக்குழுவொன்று ஈராக்கின் ஷியா மதத் தலைவர்களின் உதவியாளர்களைச் சந்தித்து இடைக்கால அரசியல் யாப்பு ஒன்றை அமுல்செய்வது குறித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளது.

இந்த அரசியல் யாப்பு இன்று கைச்சாத்திடப் படலாமென ஆளும் சபை உறுப்பினர்கள் நம்பிக்கை தெரிவித்தள்ள போதிலும் ஈராக்கில் அறுபது சதவிதமான ஷியா முஸ்லிம்கள் மத்தியில் பாரிய செல்வாக்கைக் கொண்டுள்ள அயத்துல்லா அலி அல் கிஸ் சானியின் அங்கீகாரம் கிடைத்தபின்னரே புதிய அரசியல் யாப்பை அமுல்படுத்த முடியும்என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஈராக்கில் நிலை கொண்டுள்ள பிரிட்டிஷ் படையினருக்கும், ஈராக்கிய தீவிரவாதிகளுக்கும் இடையில் நடைபெற்ற மோதலில் மூன்று தீரவாதிகள் கொல்லப்பட்ட அதேவேளை ஏழு பிரிட்டிஷ் படையினர் படுகாயமடைந்துள்ளதாக விகப் பிரிட்டிஷ் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

# 500 தொன் அணுவாயுத உபகரணங்கள் அமெரிக்காவிடம் லிபியா கையளிப்பு

லிபியா ஐந்நூறு மெற்றிக் தொன் எடை உடைய அணுவாயுத உற்பத்தி உபகரணங்களை அமெரிக்காவிற்கு அனுப்பி வைத்துள்ளது.

அணுவாயுத பரிகரணத்திற்கு உடன்படுவதாக லிபியா அமெரிக்காவிற்கு அறிவித்ததைத் தொடர்ந்து இந்நடவடிக்கையை மேற்கொண் டுள்ளது.

இதன்மூலம் அமெரிக்காவிற்கு அனுப்பிவைத்த ஐந்நூறு மெற்றிக் தொன்னில் அணுவாயுத உற்பத்தி உபகரணங்கள் மற்றும் நீண்டதூர ஏவுகணைகள், றொக் கட் லோஞ்சர்களையும் அனுப்பி வைத்துள்ளதாக வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

லிபியாவில் இருந்து பேரழிவு தரும்ஆயுதங்களை களைவதற்கான உடன்படிக்கையின் ஒருபகுதியாகவே லிபியா இந்த உற்பத்திப் பொருட்களை அனுப்பி வைத்துள்ளதாகவும், வெள்ளை மாளிகையின் தேசிய பாதுகாப்புச்சபைப்பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்த அணுவாயுத உபகரணங்களுடன் லிபியாவில் இருந்து வந்த கப்பல் அமெரிக்காவின் இரகசிய இடம் ஒன்றிற்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளதாகவும் அந்தப் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

# ஆசியாவில் ஊழல் மிகுந்த நாடாக இந்தோனேசியா கண்டுபிடிப்பு!

ஆசியாவில் ஊழல் மிகவும் கூடுதலாக இடம்பெறும் நாடு இந்தோனேசியா என ஆய்வுகள் மூலம் தெரியவந்துள்ளது.

அதேசமயம் ஆசியாவில் ஊழல் மிகவும் குறைவாக இடம்பெறும் நாடாக சிங்கப்பூர் விளங்குகின்றது.

பல நாடுகளிலுமுள்ள வர்த்தக சமூகத்தினரிடம் இந்த ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. பூச்சியத்திலிருந்து 10 வரை புள்ளிகள் வழங்கப்பட்டன. அதற்கமைய சிங்கப்பூர் 0.50 புள்ளிகளைப்பெற்றது. ஜப்பான் 3.50புள்ளிகளைப்பெற்று ஊழல் குறைந்த நாடுகளில் 2ஆம் இடத்திலும் உள்ளது. கொங்கொங் 3வது இடத்திலும் உள்ளன.

இந்தோனேசியா-9.25 புள்ளிகள், இந்தியா-8.90, பிலிப்பைன்ஸ்-8.33, வியட்னாம்-8.67.

## 4.92 கோடி மக்கள் வாக்களிக்கத் தகுதி

(சென்னை)

எதிர்வரும் 16 மாநிலங்களில் மக்களவைத் தேர்தல் மே 10ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதில் தமிழகமும் அடங்குகின்றது. தமிழகத்தில் 4கோடியே 92 இலட்சத்து 68ஆயிரத்து 408 வாக்காளர்கள் உள்ளார்கள் என்று தேர்தல் ஆணையகம் அறித்துள்ளது.

இதில் 2கோடியே 50 இலட்சத்து 41ஆயிரத்து 108பேர் பெண் வாக்காளர்கள் ஏனையவர்கள் ஆண் வாக்காளர்கள் என்றும தேர்தல் ஆணையகம அறிவித்திருக்கின்றது.

# அத்வானியின் ரத யாத்திரைக்கு கடும் பாதுகாப்பு ஏற்பாடுகள்

(சென்னை)

துணைப்பிரதமர் அத்வானியின் ரதயாத்திரையை முன்னிட்டு பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

எதிர்வரும் 10ஆம் திகதி கன்னியாகுமரியிலிருந்து தனது ரதயாத்திரையைத் தொடங்கவுள்ளார். இதற்கான பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாக மாவட்ட காவல்துறை அதிகாரி கூறியுள்ளார். தென்மாகாணத்திலிருந்தும் வரவழைக்கப்படும் காவல்துறையினர் ரதயாத்திரை தொடங்கி முடியும் இடம் வரையும் பாதுகாப்பில் ஈடுபடுத்தப்படவுள்ளார்கள் என்றும் அவர் கூறியுள்ளார்.



பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் ஜக்ஸ்ரோவ்வும் பாகிஸ்தான் சனாதிபதி பர்வேஷ் முஷாரப்பும் கைலாகு கொடுக்கின்றனர். பாகிஸ்தானுக்கு மூன்று நாள் விஜயமாக வருகை தந்த அவர் ராவல் பிண்டியில் கடந்த வியாழன் சந்தித்து இருதரப்பு விவகாரங்கள் குறித்துப் பேசினார்.

# என்னை நாட்டைவிட்டு வெளியேற்றியமை பாரதூரமான பயங்கரவாதச் செயல்!

## - கெயிட்டி முன்னாள் சனாதிபதி கண்டனம்

கெயிட்டியின் முன்னாள் சனாதிபதி அரிஸ்டைட் தமது வெளியேற்றம் ஒரு பாரதூரமான ஆட்கடத்தல் என்று கண்டனம் தெரிவித்துள்ளார்.

அவர் தனது தேசிய அரண்மனையைச் சுற்றிலும் வெள்ளையர்கள் முற்றுகையிட்டு தம்மை பலவந்தமாக விமானத்திலேற்றி வெளிநாட்டிற்குக் கொண்டு சென்றதாகவும், கையடக்கத் தொலைபேசி மூலம் கலிபோர்னியாவில் உள்ள வானொலி நிலையம் ஒன்றுடன் தொடர்புகொண்டு தெரிவித்துள்ளார்.

கடந்த மாதம் 28ஆம் திகதி இடம்பெற்ற சதிப்புரட்சியில் இராஜதந்திரம் என்ற போர்வையில் இந்த ஆட்கடத்தல் பயங்கரவாதச் சம்பவம் இடம்பெற்றதாகவும் அரிஸ்டைட் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை அரிஸ்டைட்டின் கூற்றினை அமெரிக்கா வன்மையாக மறுத்துள்ளது.

மேலும் கெயிட்டியை விட்டு வெளியேறி அஞ்ஞாதவாசம் செய்துவரும் கெயிட்டியின் முன்னாள் சனாதிபதி அரிஸ்டைட் மீண்டும் நாட்டிற்குத் திரும்ப வேண்டுமெனவும் கெயிட்டியில் நிலைகொண்டுள்ள அமெரிக்கப் படையினர் கெயிட்டியை விட்டு வெளியேற வேண்டுமெனவும் கோரி அரசியல் கூட்டின் ஆதரவாளர்கள் ஆயிரக்கணக்கானோர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் கெயிட்டியின் சனாதிபதி அரிஸ்டைட் நாட்டை விட்டு வெளியேறி ஆபிரிக்கா சென்ற பின்னர் அவரை மீண்டும் நாடு திரும்புமாறு கூறி உள்ளதோடு அமெரிக்க விஷேட படையினரை காரசாரமாக விமர்சித்ததோடு அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ.புஷ்சை பயங்கரவாதி என்றும் முத்திரை குத்தியுள்ளனா.

# பாகிஸ்தான்-ஆப்கான் எல்லையில் பின்லேடன் இருக்கின்றார்

## ஆப்கான் அதிகாரி தெரிவிப்பு

(காபூல்)

ஒசாமாபின் லேடன் பாகிஸ்தானின் ஆப்கானிஸ்தான் எல்லையில் இருப்பதாக ஆப்கானிஸ்தான் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

தலிபான் தீவிர வாதிகளை தேடிப் பிடிக்கும் பணியில் ஈடுபட்டிருக்கும் பாகிஸ்தான் இராணுவத்திடம் சிக்காமல் இருப்பதற்காகவே அல்கைறுதாத் தலைவர் ஒசாமாபின்லேடன் தப்பி ஓடி பாகிஸ்தான்ஆப்கான் எல்லைக்கருகே பதுங்கி இருப்பதாகவும் கபூலில் ஆப்கான் அதிகாரி தெரிவித்தார்.

# பாரம்பரிய மரபுகளும் பெண்கள் எழுச்சியும்

எந்தவொரு நாட்டிலும் அதன் சமூக, பொருளாதார, அரசியல் நடவடிக்கைகளில் உரிய இலக்கை அடைவதற்காக நடைமுறைத் திட்டங்களை வகுப்பதில் ஆணுக்கு நிகராக பெண்கள் ஈடுபடுவதை வலியுறுத்தவே காலம்காலமாக பெண் உரிமைப் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. 1857 மார்ச் 8ஆம் திகதி நியூயோர்க் நெசவுப் பெண்களது எழுச்சியைத் தொடர்ந்து உலகளாவிய ரீதியில் பெண்களுக்கான அந்தஸ்து, கௌரவம் கொடுக்கப்பட வேண்டியதன் தேவையை வலியுறுத்தியே முதன்முதலில் 1910ல் டென்மார்க் பெண்மணி யான்கிளாரா செட்கின் அம்மையார் குரல் கொடுத்தார். இதன் வழியாகப் 1911முதல் அமைதி, சமத்துவம், சனநாயகம் என்ற வகையில் போராட்டங்கள் நடைபெற்று வந்ததெனினும் முதன்முறையாக 1975ல் தான் அனைத்துலகப் பெண்கள் ஆண்டு என உலகம் முழுவதும் மார்ச் மாதம் எட்டாம் திகதி கொண்டாடப்பட்டது. இத்தகைய சிறப்புக்குரிய அனைத்துலகப் பெண்கள் நாளில் பாரம்பரிய மரபுகளின் ஊடாக பெண்கள் எவ்வளவு தூரம் எழுச்சிபெற வேண்டியுள்ளனர் என்பதை இக்கட்டுரையின் தேடலின் ஊடாகக் காணமுடிகின்றது.

பெண் அடக்குமுறை என்பது பொதுவாக பொருளாதார நலிவு, கல்வி அறிவு அற்ற குடும்பத்துப் பெண்களிடையேதான் கூடுதலாகக் காணப்படுகின்றது. பெண்ணின் இயற்கையான தன்மைகளிலிருந்து விடுபடுவதுதான் பெண்ணிய சுதந்திரம் என்றும் எண்ணுவதற்கில்லை. மாறாக பெண்களது மனவுணர்வுகளுக்கு பாரம்பரிய மரபுகள் எந்தளவிற்கு வேலியிட்டுள்ளது. இந்த வேலிக்குள் இருந்து பெண்கள் வெளியுலகை எட்டிப்பார்க்காது வெளியில் வந்துசேர வேண்டும் பொதுவாக பெண்கள் பின்வரும் அம்சங்களின் அடிப்படையில் அடக்கு முறைகளுக்குள்ளாகின்றார்கள்.

1.குடும்பமும் பெண்ணும்

2.சமூகத்தால் தோற்றுவிக்கப்பட்டிருக்கும் பெண்நிலை

3.வன்முறை

4.சீதனம்

5.மதம்

6.கணவனின் மனைவி

7.அரசியலில் பெண்கள்

8.திரைப்படம்/விளம்பரம்

போன்ற பலவற்றைக் குறிப்பிடலாம்.

நவீன அறிவியல் எழுச்சிபெற்ற இன்றைய நாட்களில்கூட பலகுடும்பத்தில் பெண்பிள்ளையின் பிறப்பு என்பது எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. 'ஐந்து பெண் பெற்றால் அரசனும் ஆண்டியாவான்' என்ற பண்டைய பழமொழி இன்னமும் எம்மிடையே உயிர்பெற்றவாறே உள்ளது. 'தாய்க்குத் தலைமகன்' வேண்டுமென்ற வேண்டுதல்களும் மறைந்தபாடில்லை. ஆண் பிள்ளையை முதற் பெற்றவர்களே நல்ல காரியங்களில் முன்னுக்கு நிற்கவேண்டும் என்ற மரபு அதிகம் படிப்பறிவு உள்ளவர்களிடம் மேலோங்கி இருப்பதையும் மறுப்பதற்கில்லை. கல்விக்கான வாய்ப்புக்களில் பாரபட்சம், வயதுக்குவந்துவிட்டால் திருமணம் என்ற பேச்சும், திருமணத்தின் பின்பு கணவன் அவன் குடும்பம் சார்ந்த சுமைகளுக்கும் பெண் முகம் கொடுக்க வேண்டும். அவளின் உணர்வுகள், சுதந்திரமான கருத்துக்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுவதில்லை. அதிகம் பேசாது எதற்கும் விட்டுக்கொடுக்கும் பெண்ணே சிறந்த குடும்பப்பெண் என்ற வரைவிலக்கணத்திற்காகவே தம்முள் எழும் உணர்வுகளை அடக்கித் தம்மையே போலியாக்கி வாழ்கின்ற பெண்களது உணர்வுகளை நாம் கண்டெடுத்தும் பார்ப்பதில்லை இந்நிலையிலிருந்து பெண் சமூகம் விழிப்படைய வேண்டும். பிறப்பில் ஆணென்ன, பெண்ணென்ன ஆற்றலே சிறந்ததாக இருக்க வேண்டும்.

புராதன காலம் முதல் ஆணாதிக்க சமூகம் பெண்களை மதம்,குடும்பம்,கலை இலக்கியம் என்ற போர்வைக்குள் அடக்கி வைக்க முற்பட்டமையால் தான் இன்றுவரை பழமைவாதிகளிடமிருந்து பெண்கள் மீள முடியாதுள்ளன. முறைதவறிய பெண்களுக்கான பட்டங்களை வழங்கும் சமூகம் ஆண்களை அவ்விதம் நோக்குவதில்லை. ஆண்துணையின்றி ஒரு பெண் தனித்திருந்தால் அவளை நோக்கும் ஒவ்வொரு கண்ணும் என்னென்ன விதமாகக் கற்பனை செய்து எத்தனையோ பேருடன் அவள் வாழ்க்கையை முடிச்சுப்போட்டுப் பார்க்கும் நிலைகூட பொதுவாக படித்தவர்கள் மத்தியிலும் இன்று வளரத் தொடங்கிவிட்டது. கணவன் இறந்ததும் பெண் விதவையென அவளுக்குப் பெயர் சூட்டும சமூகம் அவளிடம் எழுகின்ற உணர்வுகளையே இதனால் மூடிவிடுகின்றது. சராசரி மனிதன் என்ற பார்வையில் ஆணானாலும் சரி, பெண்ணானாலும் சரி உணர்வுகள் ஒன்றுதானே? அவ்வாறு இருக்க அவள் பெண் என்பதற்காகவும் இந்த சமூகம் என்னைப் பழிதூற்றும் என்று அஞ்சியே உள்ளத்துணர்வுகளை எல்லாம் அடக்கி வெறும் போலி வாழ்க்கைக்கு தன்னைத் தயார்படுத்தி வாழவேண்டிய கட்டாய நிலைக்குள்ளாகின்றாள். இந்நிலையிலிருந்து பாதிக்கப்பட்ட பெண் விழிப்புணர்வு பெறவேண்டும் என்பதற்கு மேலாக, இந்த சமூகத்தின் பார்வை, மனப் பாங்கு என்பவை எழுச்சிபெற வேண்டும்.

அறிவியல் வளர்ச்சி, நாகரீகம் பெற்ற சமூகமாக மனிதன் வளர்ந்தபோதும் பெண்ணின் சம்மதம் இன்றி வல்லுறவிற்கு உட்படுத்தும் நிலை இன்னமும் ஓய்ந்தபாடில்லை. பொதுவாக போர் நடைபெறும் நாடுகளில் போர்வீரர்களால் பெண்கள் பாலியல் வன்முறைக்கு உட்படுத்துவது ஒருவகை, அதற்கும் மேலாக தம் இனத்தைத் தாமே வதைசெய்யும் நிலைகள் பலமாகவேயுள்ளன. இந்நிலை மாறவேண்டும். பெண் என்பவள் எந்த

## இன்று சர்வதேச பெண்கள் தினம்

நேரமானாலும் தனித்து ஒரு வழிசெல்லக்கூடிய நிலை உருவாக வேண்டும். மேலைத்தேச நாடுகளைப் பொறுத்தவரை பெண்களின் உணர்வுகள் விபச்சாரம் என்ற பெயரில் விலை போகின்றது. தமிழ்ப் பெண்களைப் பொறுத்தவரைபாலியல் வல்லுறவிற்குட்பட்ட பெண் தனக்குரிய நீதிகோரிக்கூட வெளியில் பேசமுடியாத நிலை அவ்விதம் எந்தப்பெண்ணும் தனித்து வந்துவிட்டால் அவளை இந்த சமூகம் பார்க்கும் பார்வை அப்பப்பா போதும் என்றாகிவிடும். இதனாலேயே பல பெண்கள் வாழ வழியின்றி வாய்பேசாத ஊமைகளாக வடுக்களை சுமப்பது மட்டுமின்றி சில வேளைகளில் தற்கொலையும் செய்துவிடுகின்றார்கள். இந்நிலை மாறவேண்டும். பாதிப்புற்ற பெண்கள் நியாயத்தைப் பெறத்துணிய வேண்டும். சமூகம் இதற்கான வாய்ப்புக்களை வழங்கி பெண்ணின் அந்தஸ்தை, கௌரவத்தைப் பேண முன்வரவேண்டும். இன்று பெண்களை பெருமளவிற்கு பாதித்திருக்கும் ஒன்று சீதனம். ஆரம்பகாலத்தில் ஒரு பெண்ணை இன்னொருகுடும்பத்திற்கு அனுப்பும்போது தமது அந்தஸ்தை நிலைநிறுத்த சீர்(பரிசுகள்) வழங்கினர். இதுவே இன்றைய கட்டாய சீதனமாக மாறி பெண்களையும் பெற்றவர்களையும் துன்புறுத்துகின்றது. திருமணம் என்பது ஒரு ஆணும்,பெண்ணும் பாலுறவு கொள்வதற்கான அனுமதியை அழிக்கும் சட்டமாகும் இதுதான் இன்று விலைபேசப்படுகின்றது. பெண்ணின் படிப்பு, தகுதி எதுவும் கருத்தில் கொள்ளப்படாது ஒரு ஆண் என்ற ஒரே ஒரு தகுதிக்காக பெருமளவு சீதனத்தைக் கொடுத்து வசதியானவர்கள் கொள்வனவு செய்ய, ஏழைப்பெண்கள் இளமைக்கனவுகளோடு காலத்தை ஓட்டுவதையும் நாம் காண்கின்றோம். இந்நிலை இன்றும் மாப்பிள்ளையின் சந்தைவிலை இதுவென்று பத்திரிகையிலேயே விளம்பரமாகும் நிலையைத் தோற்றுவித்துள்ளது. இதனை ஆண்கள் சிந்தித்து உடைத்தெறிவார்களேயானால் எத்தனை பெண்களதுஉள்ளங்கள் உற்சாகமடையும். சீதனம் இவ்வளவு வாங்கினேன் என்று கூறுவதில்தான் இன்று ஆணின் தகுதி, கௌரவம் தங்கியுள்ளது. இந்நிலை மாறவேண்டும். பெண்களும் தகுதியெல்லாவற்றையும் ஒதுக்கி இத்தகைய ஆணாதிக்கத்திற்குக் கட்டுப்படும் நிலையில் இருந்து விடுபடவேண்டும்.

மதரீதியாகவும் பெண்கள் அடிமைப்படும் நிலை இன்றுவரை தொடர்கின்றது. புராண இதிகாசங்களிலேயே பெண்களை அடிமைகளாக சித்தரித்த பார்வையால் ஆணுக்குப்பின்பே பெண்கள் எதிலும் பங்கு கொள்ளலாம், மதரீதியான கடமைகளில் கூட ஆண்கள்தான் ஈடுபட வேண்டும். ஆண்பிள்ளைகள் இல்லாத குடும்பத்தில் தந்தை வழிவந்த ஆண் மகன் கிரியைகள் செய்வதும் பாரம்பரியமாக வருகின்ற விடயமே. இன்றுசில வீடுகளில் மரணக்கிரியைச் சடங்குகளில் பெண்பிள்ளைகள் கொள்ளிவைக்கமயானம் செல்கின்றவரை உயர்ந்துள்ளார்கள் என்பதும் வளர்ச்சியே. இத்தகைய உணர்வு ரீதியான செயற்பாடுகள் ஒவ்வொருவரிடமும் வளரவேண்டும். பெற்றவர்களுக்கு பிள்ளைகள் கடமைசெய்ய வேண்டுமென்பது பாரம்பரியம் என்றால் இதில் ஆண பிள்ளை, பெண்பிள்ளை என்றவேறுபாடு எதற்கு? எல்லோரும் சிந்திக்க வேண்டிய விடயம் இது. விதவையானால் தன் பிள்ளையின் நற்காரியங்களைக்கூட எங்கோ மறைவிலிருந்து பார்க்கும் வழக்கத்தை எந்தமதத்தில் எந்தக் கடவுள் இட்டார்? மானசீகமாக ஒருதாய் வாழ்த்தாமல் வேறு எவர் வாழ்த்துவார்? பெற்றுவளர்த்த இந்தத தாய்க்குள்ள உரிமையைக் கூட எமது பாரம்பரியங்கள் பறிப்பதென்பது எவ்வளவு துரோகமானசெயல்? சிந்தித்து விழிப்படைய வேண்டும்.

மதச்சடங்கின் மூலம் 'பெண்ணை ஆணுக்கு தாரை வார்த்துக் கொடுத்தல்' எனும் மரபானது அந்தக் குடும்பத்திற்கு இதுவரைவேண்டாத ஒருபொருளாக அந்தப் பெண் இருந்ததாகவும், அதனைக் கைகழுவி விடுவதாகவும் எடுக்கலாம். ஏனெனில் எம்கைகளில் அழுக்கிருந்தால் தான் அதனைக் கழுவுகின்றோம். பெற்றவர்களுக்கு பெண்ணும் அவ்வாறு தானா? சிந்தித்துப் பார்த் தால்.....! பெற்றோருக்கு அடுத்தப்படியாக கணவன், குடும்பம் என்ற சிறைக்கைதியாகப் பெண்ணும், சிறைக்காவலனாக கணவனும் இணைந்த வாழ்க்கையில் மனமொன்றிய வாழ்வானால் எவ்வித பிரசசினைகளும் இல்லை அதுவே மறுமணமாகவிருந்தால் கணவனின் மனைவி என்பதற்காகவே எல்லாவற்றையும் அனுசரித்துப் போகவேண்டியநிலை. ஒருஆணுக்கு பெண்பிடித்திருக்கிறதா? என்று கேட்பார்களே தவிர பெண்ணுக்கு ஆணைபிடித்திருக்கிறதா? என எத்தனை பெண்களிடம் சம்மதம் பெற்றோர்கள் கேட்கின்றார்கள்?இங்கு மற்றவர்களின் சந்தோஷத்திற்காகவே தன்னைத் தன் உணர்வுகளை அடக்கி எத்தனை பெண்கள் வாழ்கின்றார்கள். எல்லாவற்றையும் தேடும் நாம் பெண்ணின் உள்ளத்தின் உணர்வுகளையும் தேடும் நிலை வளர வேண்டும்.

இலங்கையில் 1931இல் டொனமூர் அரசியல் சட்டமூடாக 21 வயதிற்கு மேற்பட்ட அனைத்துப் பெண்களும் வாக்களிக்கும் உரிமையைப் பெற்றனர். இலங்கையில் அண்மைய தேர்தல் சீர்திருத்த முறை மூலமாக 'சகல அரசியல் கட்சிகளிலும் 30 சதவீத இட ஒதுக்கீடு பெண்களுக்கு வழங்கவேண்டும்' எனும் கருத்தானது ஓரளவு இலங்கைப் பெண்களது அரசியல் விழிப்புணர்வை எடுத்துக்காட்டுகின்றது. எனினும் அரசியலில் பிரவேசிக்கும் பெண்கள் தந்தைவழி அல்லது கணவன் வழியாகப் பிரவேசிப்பதும் கவனிக்கத்தக்கது. இந்நிலையும் மாற வேண்டும். இலங்கையில் பிரதேசத்திற்கு பிரதேசம் பெண்களது நிலைமைகளில் வேறுபட்டிருப்பதும் இங்கு நோக்கத்தக்கது. மலையகப் பெண்கள் தான் இன்னமும் பலவகையான அடக்கு முறைகளிலிருந்தும் விடுபட முடியாதுள்ளனர். தமிழீழப் பெண்களைப் பொறுத்தவரை பலதுறைகளிலும் அவர்கள் எழுச்சி பெற்றிருப்பதும் சான்றாதாரமே.

பெண்களை கவர்ச்சிப் பொருட்களாக சித்திரிக்கும் திரைப்படங்கள், விளம்பரங்களினால் பெண்கள் தலைகுனியும் நிலை அதிகரித்து வருகின்றது. பெண் கவர்ச்சி இல்லையேல் இவை இயங்க முடியாத நிலை. நாகரீகம் என்ற போர்வையில் பெண்களதுஆடைகளும் அரைகுறையாகி வருகின்றது. இது பற்றிப் பெண்கள்தான் விழிப்படைய வேண்டும். கவர்ச்சி காட்டும் பெண்களை ஆண்களால் இரசிக்கத்தான் முடியுமே தவிர ஏற்றுக்கொள்வார்கள் என்றில்லை. இந்த விடயத்தில் ஒவ்வொருவரும் தமக்குரிய விருப்பினடிப்படையில் ஆடைகளைத் தெரிவு செய்தாலும், பிறர் இம்சைகளுக்காளாகாமல் பெண்கள் தான் விழிப்பாக இருக்க வேண்டும்.

திருமதி-மீனலோஜினி
இதய சிவதாஸ்

சுருங்கக்கூறின் பெண்கள் இன்று அனைத்துத்துறைகளிலும் எழுச்சி பெற்றிருக்கின்றார்கள் என்பதை மறுப்பதற்கில்லை. எனினும்,

1. அனைத்துப்பெண்களும் கல்வியறிவு பெறுதல்.

2.வேலைவாய்ப்பைப் பெற்று வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல்.

3. முடிவெடுக்கும் செயற்றிறன்.

போன்றவற்றை பெண்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும். ஆசிய நாடுகளைக் பொறுத்தளவில் இலங்கைப் பெண்கள் எழுத்தறிவு கூடியவர்களாக இருப்பது சிறந்த ஒரு குறிகாட்டியே. எனினும் இன்னமும் பழைய, மரபுகள் இவற்றிலிருந்து பெண்கள் விடுபட வேண்டும் தமக்குத் தாமே வேலிகளை அமைத்து சமூகத்திற்கு அஞ்சி வாழும் நிலையிலிருந்து விடுபட வேண்டும் பிறரைப் பாதிக்காததும் தனக்கு ஏற்றதுமான செயற்பாடுகளைச் செய்வதற்கு பெண்கள் முன்வரவேண்டும்.

மரபுகள் மனித வாழ்வை செம்மைப் படுத்தும்நோக்கில் முன்வைக்கப் பட்டனவே அன்றி, பெண்களை அடக்கி வைப்பதற்காக உருவாக்கப்பட்டவையல்ல காலமாற்றங்களினால் திரிபுபட்ட விடயங்களின் நியதி இவைதானென வரைவிலக்கணம் கூறாது சுயமாக சிந்தித்து செயற்படும் வகையிலான மனப்பாங்கை பெண்களாகிய நாம் வளர்த்துக் கொள்ளுவோமாக.

★ ★ ★ ★ ★

# நடைபெறவுள்ள தேர்தலில் அனைவரும் ஒன்றுபட்டுச் செயற்பட்டு வெல்வோம்

## தேர்தல் குறித்த கலந்துரையாடலில் க.வே.பாலகுமாரன்

(முல்லைத்தீவு)

**நடைபெறவுள்ள தேர்தலில் நாம் அனைவரும் ஒன்றுபட்டு செயற்பட்டு வெற்றிபெறுவோம். சனநாயக ரீதியிலான இந்தப் போராட்டத்தில் அனைவரும் இணைந்து செயற்பட வேண்டும் என முல்லைத்தீவில் நடைபெற்ற தேர்தல் தொடர்பான கலந்துரையாடலில் விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே.பாலகுமாரன் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், இந்தத் தேர்தலை சொந்தப் பணியாகக் கருத வேண்டும். உங்கள் உறவுகளின் வீடுகளில் நடைபெறும் விழாக்கள் போல நினைத்து செயற்பட வேண்டும். வாக்குப்போட வேண்டாம் என்று சொன்ன நாமே வாக்குச்சீட்டை எவ்வாறு போட வேண்டும் என்று விளம்பரம் ஒட்டிக்கொண்டு வாகனத்தில் திரிகின்றோம்.

இந்த மண்ணில் நிகழ்ந்துள்ள மாற்றத்தை நீங்கள் சரியாகப் புரிந்துகொள்ள வேண்டும். தவறான சமிக்கை எதுவும் தருவதற்கு இந்த மேடையில் நாம் வரவில்லை. தேர்தல் என்பது அதுவும் சிறிலங்கா பாராளுமன்றத்தில் அது ஒருவழுக்கு மரம் என்பது இன்றைக்கு அல்ல என்றைக்கும் எந்தக் கருத்து வேறுபாடும் வரப்போவதில்லை.

இன்றைக்குள்ள நிலைமை என்ன அதுதான் நான் தவறான சமிக்கை என்று கூறினேன். எல்லோரும் நினைக்கிறார்கள் புலிகளும் பழையபாணிக்கு போய்விட்டார்களோ என்று, இது பெரும்பாலாருடைய கருத்தென்றால் என்ன, ஒருவருடைய கருத்தென்றால் என்ன ஒரு தவறான குறியீட்டு வடிவம் வரக்கூடிய அபாயம் இருப்பதை நாம் உணருகிறோம். அதை முற்றாகமாற்றி அமைக்க வேண்டும் என்பது எனது தாழ்மையான வேண்டுகோள். நாங்கள் இந்தத் தேர்தலை பகுதியாய்ப் பார்க்கின்றோம். எல்லாவற்றையும் ஒட்டு மொத்தமாக தொகுத்துப் பார்க்கின்றோம். எல்லாவற்றையும் என்று கூறும்போது இராணுவரீதியான செயற்பாடு,அரசியற்செயற்பாடு, சனநாயகச் செயற்பாடு என்ற இந்த மூன்று செயற்பாடுகளையும் தொகுத்து ஒரு உத்தியை வகுத்து செயற்படுகின்றோம்.



அதைத்தான் இங்கு கூறுகின்றார்கள். போரின் மறுகாட்சி, போரின் மறுவடிவம் என்று பலபெயர்கள் சூட்டினார்கள்.

போரை நிறுத்தி இன்னொரு வடிவமான போரை நாம் இங்கு செய்கிறோம். அந்த எண்ணம் தெளிவாக உங்களுக்கு இருந்தால் இதுதான் முதலாவது மிகவும் பொருத்தமானது.

இந்த மேடை பழைமையான ஒரு தேர்தல் மேடை அல்ல. தெளிவாக எல்லோரும் புரிந்துகொள்ள வேண்டும். வாக்களிப்பு எப்படி என்பது நிச்சயமாக எல்லோருக்கும் தெரியாது. வாக்களிப்பதற்கு எப்படி நாம் செல்வது என்பதும் எமக்குத் தெரியாது. ஆனால் தேர்தல் அன்று பெரிய புரட்சியை உருவாக்க வேண்டும். எங்களுடைய மக்கள் எல்லோரும் சேர்ந்து நின்று வாக்களிக்க முடியாவிட்டால் உலக நாடுகளுக்கு நாம் கூறுவோம் வாக்களிக்கவிடவில்லை என்று,

பேசவாருங்கள் என்றால் பேச வருகிறார்கள் இல்லை, போர் தொடுத்து முடிக்கலாம் என்றால் விடுகிறார்கள் இல்லை, வாக்களிக்க சென்று வாக்களிக்கவிடவில்லை என்ற செய்தியை நாம் உலகிற்கு கூறவேண்டும் எனத் தெரிவித்தார்.

வெள்ளிக்கிழமை காலை 10.15மணிக்கு முல்லைத்தீவு மகாவித்தியாலய மண்டபத்தில் முல்லை.மாவட்ட கடற்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் தலைமையில் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது.

இக் கலந்துரையாடலில் பொதுச் சுடரினை முல்லை. மாவட்ட தேர்தல வேட்பாளர் சதாசிவம்-கனகரத்தினம், முல்லை. மாவட்ட தமிழீழ நிர்வாகசேவைப் பொறுப்பாளர் இசைய முதன் ஆகியோர் ஏற்றிவைக்க, தமிழீழ தேசியக் கொடியினை முல்லை. மாவட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழ்நிலவு ஏற்றினார்.

கருத்துரைகளை முல்லை. மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர் அருணாசலம் வாக்களிப்பது எவ்வாறு என நிதித்துறையைச் சேர்ந்த ஆதவன், கரைதுறைபற்று பிரதேசசபை செயலாளர் கிருஸ்ணபிள்ளை, ஆகியோர் வழங்கினர். தற்கால அரசியல் நிலை தொடர்பாகவே விடுதலைப்புலிகளின முக்கி யஸ்தர் க.வே.பாலகுமாரன் இங்கு உரையாற்றினார். இக்கலந்துரையாடலில் அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் பணியாளர்கள், பொதுமக்கள் என பெருமளவானோர் கலந்து கொண்டனர். (20)

### பொறியியல்பீடப் பரீட்சைகள்

பேராதனைப் பல்கலைக் கழகத்தில் பிற்போட்ட பொறியியல் பீடப் பரீட்சைகள் நடைபெறவுள்ளன.

பொறியியல் பகுதி மூன்றிற்கான இறுதிப் பரீட்சை வரும் ஒன்பதாம், பதினோராம், பதினைந்தாம் திகதிகளில் நடை பெறுமென பதிவாளர் அறிவித்துள்ளார்.

# தேர்தல் செயலணிக் கிளை உவர் மலையில் திறப்பு

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் திருகோணமலை மாவட்ட உவர் மலைத் தேர்தல் செயலணிக் கிளை நேற்று முன்தினம் காலை உவர்மலை மத்திய வீதியில் திறந்துவைக் கப்பட்டது.

நிகழ்வுக்கு கி.சத்தியசீலன் தலைமை வகித்தார் கோ.சத்திய சீலராசா மங்கல விளக்கேற்றி வைத்தார். சி.குமரகுருபரம், ம.தர்மராசா (சீலன்) ஆகியோரும் மங்கல விளக்கேற்றினர். கூட்டமைப்பின் வேட்பாளர்களான க.துரைரட்ணசிங்கம், க.இரகுநாதன், சதா-சண்முகநாதன், எஸ்.கௌரி முகுந்தன், வ.விக்னேஸ்வரன், சாகுல்ஹமீது ஆகியோர் உரைநிகழ்த்தினர் எதிர்வரும் தேர்தலை தமிழ் மக்கள் சர்வசனவாக்கெடுப்பாகக் கருதி விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டை பலப்படுத்த வேண்டுமென்று துரைரட்ணசிங்கம் கேட்டுக்கொண்டார்.

தமிழ், முஸ்லிம் மக்களுக்கிடையே ஒற்றுமையைப் பலப்படுத்தவே தாம் தமிழ் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளராக போட்டியிடுவதாக சாகுல்ஹமீது ஆசிரியர் தெரிவித்தார். எஸ். கௌரி முகுந்தன் பேசுகையில், விடுதலைப் புலிகளின் கரத்தைப் பலப்படுத்துவதற்காகவே தமிழ் தேசியக் கூட்டமைப்பு இத்தேர்தலில் போட்டியிடுவதாகக் கூறினார். சதா-சண்முகநாதன், வ.விக்னேஸ்வரன், க.இரகுநாதன் ஆகியோரும் பேசினார்கள். (25)

# ஆனந்தசங்கரியின் சுயேச்சைக் குழுவினருக்கு யாழ்.இல் தொடர்ந்து கொலை மிரட்டல்

ஆனந்தசங்கரி தலைமையில் யாழ்.மாவட்டத்தில் போட்டியிடும் சுயேட்சைக்குழுவினர்க்கு தொடர்ச்சியாக கொலை மிரட்டல்கள் விடுக்கப்பட்டு வருகிறது.

இனந்தெரியாதோரால் நடத்தப்பட்டுவரும் இவ் 'அச்சுறுத்தல்களைத் தொடர்ந்து இச்சுயேட்சைக்குழு வேட்பாளர்கள் ஒவ்வொருவருக்கும் பொலிஸ் மற்றும் இராணு வப் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. (33)

# புதுக்குடியிருப்புப் பகுதியில் தேசிய எழுச்சிப் பேரவை தெரிவு

(புதுக்குடியிருப்பு)

2004 ஆம் ஆண்டுக்கான புதுக்குடியிருப்பு வட்ட தேசிய எழுச்சிப் பேரவைத் தெரிவு நிகழ்வு அண்மையில் கோம்பாவில் கிராம அலுவலர் பிரிவில் புதுக்குடியிருப்பு வட்டப் பொறுப்பாளர் பிறையாளன் தலைமையில் இடம்பெற்றது. கிராம அலுவலரால் சமகால அரசியல் விளக்கங்கள் வழங்கப்பட்டது எழுச்சிப்பேரவைக் குழுவில் செ.தனபாலசிங்கம் செயலாளராகவும், உதவிச் செயலாளர் ப.கிருஷ்ணபிள்ளை, பொருளா ளர் சி.யோகராணி மற்றும் இக் கிராமங்களுக்கான உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (26)

# ஒட்டுசுட்டான் கோட்டமட்ட உடற்பயிற்சி போட்டி

(ஒட்டுசுட்டான்)

ஒட்டுசுட்டான் கோட்ட பாடசாலை மாணவர்களுக்கான உடற்பயிற்சி போட்டி வெள்ளிக்கிழமை நடைபெற்றுள்ளது.

ஒட்டுசுட்டான் கோட்டக்கல்வி அதிகாரி சி.ஜெயபாலன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் பொதுச்சுடரினை ஒட்டுசுட்டான் மகாவித்தியாலய உப அதிபர் நிர்மலா, ஒதியமலை பாடசாலை அதிபர் ஆகியோர் ஏற்றிவைக்க, தேசிய கொடியினை ஒட்டுசுட்டான் கோட்ட கல்வி அதிகாரி சி.ஜெயபாலன் ஏற்றினார்.

இவ் உடற்பயிற்சி போட்டியில் ஆண்கள் பிரிவில் முத்து ஐயன் கட்டு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை 1ஆம் இடத்தினையும், முத்து ஐயன்கட்டு இடது கரை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை 2ஆம் இடத்தினையும் , கற்சிலைமடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை 3ஆம் இடத்தினையும், பெண்கள் பிரிவில் முத்து ஐயன் கட்டு இடது கரை அ.த.க.பாடசாலை 1ஆம் இடமும், கற்சிலைமடு அ.த.க.பாடசாலை 2ஆம் இடமும், முத்து ஐயன்கட்டு வலது கரை அ.த.க. பாடசாலை 3ஆம் இடத்தினையும் பெற்றுள்ளன.(05)

# அம்மா நலமா? முழுநீளத் திரைப்படம் கிளிநொச்சியில் சிறப்புற வெளியீடு

(அலுவலக செய்தியாளர்)

நிதர்சனம் நிறுவனத்தின் சிறப்பு வெளியீடான இயக்குனர் ந. கேசவராஜனின் அம்மா நலமா? முழு நீளத் திரைப்படம் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் பி.ப. 4.00 மணிக்கு கிளிநொச்சி மத்திய கல்லூரியில் நடைபெற்றது.

நிதர்சனப் பொறுப்பாளர் சேரலாதன் தலைமையில் நடைபெற்ற மேற்படி வெளியீட்டு நிகழ்வில் பொதுச் சுடரினை மாவீரர்கள் மேஜர் ராஜன், கப்டன் ரங்கனின் தாயார் பே.பார்வதிப்பிள்ளை ஏற்றிவைக்க, தமிழீழத் தேசியக்கொடியினை கடற்புலிகளின் தளபதி மங்களேஸ் ஏற்றிவைத்தார்.

தலைமையுரையினையடுத்து வரவேற்புரையினை திரைப்பட வெளியீட்டுப் பிரிவு பொறுப்பாளர் ராதா நிகழ்த்தினார். சிறப்புரையினை விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர் வே. பாலகுமாரன் நிகழ்த்தினார்.

அதனையடுத்து தமிழீழ அரசியல் துறைதுணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் அம்மா நலமா? திரைப்படத்தின் முதற்பிரதியினை வெளியிட்டு வைக்க, மட்டு - அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் பெற்றுக் கொண்டார். அடுத்து பிரதிகள் வெளியீட்டு நிகழ்வு இடம்பெற்றது.

திரைப்படத்தின் மதிப்பீட்டுரையினை வெளிச்சம் சஞ்சிகை ஆசிரியர் கருணாகரனும், பதிலுரையினை கேசவராயனும் நிகழ்த்தினார். அடுத்து திரைப்பட உருவாக்கத்திற்காக அயராது உழைத்த அனைவருக்கும் சிறப்பு பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டது. மட்டு- அம்பாறை துணைத்தளபதி பிரபா இப் பரிசில்களை வழங்கி கௌரவித்தார்.



சோ.தங்கனிடமிருந்து கௌசல்யன் சிறப்புப் பிரதியைப் பெறுகின்றார்.

அதனை தொடர்ந்து அம்மா நலமா? முழு நீளத் திரைப்படம் திரையிடப்பட்டது. பெருந்திரளான மக்கள் கலந்துகொண்டு பார்வையிட்டமை குறிப்பிடத்தக்கது. (சோ,15)

# இன்று அனைத்துலக பெண்கள் தினத்தை பளையில் சிறப்புற அனுஷ்டிக்க ஏற்பாடு

அனைத்துலக மகளிர் தினமான இன்று கிளிநொச்சி மாவட்டத்தில் செயற்படும் உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனமாகிய உழைக் கும் மகளிர் அபிவிருத்தி நிறுவனம் தமிழர் புனர்வாழ்வுக் கழக ஆதரவுடன் சிறப்புறக் கொண்டாட ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

இன்று திங்கட்கிழமை மாலை. 2.30 மணிக்கு பளை நகரப் பகுதியில் இருந்து பாண்ட்வாத்தியத்துடன் ஊர்வலமாக ஆரம்பிக்கப்படும் இந்நிகழ்வு பளை மகாவித்தியாலயம் வரை வந்தடைந்து நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. இந் நிகழ்வில் பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களின் மேம்பாட்டிற்கான வருமானத் திட்டத்தின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு நிதி வழங்கல் நிகழ்வு மற்றும் மகளிர்களின் கலை நிகழ்வுகள் முக்கிய உறுப்பினர்களின் கருத்துக்களும் இடம்பெறவுள்ளன. மேலும் இந் நிகழ்வில் அனைத்து மகளிர்களையும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவனத்தின் செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கின்றது. (லோ)



வன்னி தொழில் நுட்பவியல் நிறுவகம் (வன்னி ரெக்) 5ஆம், 6ஆம் திகதிகளில் நடத்திய இலவச கணினி செயல் முறைக் கண்காட்சியில் நிறுவனத்தினரால் தயாரிக் கப்பெற்ற காவலாளியின் கடமையினை புரியும் ரோபோவையும் இதனைத் தயாரித்தவர்களில் ஒருவரையும் படத்தில் காணலாம் (படம் - சோதி)

உலகளாவிய ரீதியிலே இன்று முன்னெடுக்கப்பெறும் பெண்கள் நாளிலே தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் ஆதரவுடன் உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவனத்தால் கிளிநொச்சி மாவட்டத்தில் முன்னெடுக்கப்பெறும் அனைத்துலக பெண்கள் நாள் நிகழ்வு

# சிறப்பு மலர்




## கிளிநொச்சி மாவட்ட அரச அதிபரின் வாழ்த்துச்செய்தி

கிளிநொச்சி மாவட்டத்தில் உலக மகளிர் நாளை நல்லமுறையில் கொண்டாடுவதற்கு கிளிநொச்சி உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவனத்தினர் பரந்த அளவில் ஏற்பாடு செய்திருப்பது கண்டு மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

தமிழர் புனர் வாழ்வுக்கழகத்தின் வழிநடத்தலில் இந்நிறுவனம் பல சுய தொழிலில் வேலைவாய்ப்புக்களை மகளிருக் காக ஏற்படுத்தி அயராது உழைத்து வருகின்றது. பரந்துபட்டளவில் பெண்களது ஆளுமையை விருத்திசெய்யவும், அவர்கள் சொந்தக்காலில் நிற்கவும் அரும்பணியாற்றி வருகின்றது.

ஆதரவற்ற நலிந்த பெண்களது முன்னேற்றத்தின் பங்காளிகளாகத் திகழும் இந்நிறுவனத்தினரது செயற்பாடுகள் மென் மேலும் பெருகவும் இவர்களால் ஏற்பாடு செய் யப்பட் டுள்ள உலக மகளிர்நாள் சிறப்புற நடை பெற எனது வாழ்த்துக்களையும் தெரிவித்து நிற்கின்றேன்.

தி.இராசநாயகம்,
அரச அதிபர்,
கிளிநொச்சி.



## உழைக்கும் மகளிர் நிறுவனத் தலைவியின் ஆசியுரை

அனைத்துலகப் பெண்கள் நாள் நினைவாக நடைபெறும் நிகழ்வுகள் தொடர்பாக பெண்ணின் விடுதலை முக்கிய பங்கு வகிக்கின்றது. ஆரம்ப காலத்தில் பெண்கள் அடக்கப்பட்டு, அடிமைகளாக்கப் பட்டு இருந்தார்கள் ஆனால், இன்று பெண்கள் தலை நிமிர்ந்து நிற்கும் அளவிற்கு மாறியுள்ளனர்.

ஆணுக்குப் பெண் நிகர் என்றுவாழும் பெண்கள் அனைத்துலக பெண்கள் நாளாகிய இன்று பங்குனி 8ஆம் திகதியை கோலாகலமாக கொண்டாடி மகிழ்ச்சியுறுவதைக் காணும்போது மிகவும் சந்தோசமடைகின்றேன். மேலும் பெண்கள் சமுதாயத்தில் முன்னேறிச் சென்று உயர்வடைய வேண்டுமென்று எனது நல்லாசிகளையும் தெரிவித்து நிற்கின்றேன்.

புவனா கனகசபை,
தலைவி,
உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவனம்.

## அனைத்துலகப் பெண்கள் நாளிலே உறுதியெடுப்போம்

உலகளாவிய ரீதியில் இன்று முன்னெடுக்கப் பெறும் பெண்கள் நாளிலே தமிழர்புனர்வாழ்வுக் கழகத்தின் ஆதரவுடன் கிளிநொச்சி மாவட்டத்தில் முன்னெடுக்கப்பெறும் அனைத்துலக பெண்கள்நாள் நிகழ்விலே அணியாகக் கரம்பற்றி நிற்கும் நாம் அனைத்துலகும் உணரும் வகையில் உண்மையின் உழைப்புக்களாய் பெண்ணினத்தின் உயர்வுக்காய் உறுதியெடுப்போம்.

பல்வேறு பரிமாணங்களில் பரந்துபட்டுள்ள மனித வாழ்வில் பெண்ணினம் கணிசமான பங்கு வகித்து ஆண், பெண் சமத்துவ நிலைக்காக அயராது உழைக்கின்ற வேளையிலும் ஒடுக்குமுறையின் கரங்களும், கரண்டல்களின் ஆதிக்கமும் உலகியல் பார்வையில் படர்ந்திருப்பதும் உணர்ந்துகொண்ட உண்மையாகும்.

தமிழீழப்பெண்களைப் பொறுத்தவரையிலே அவர்கள் விடுதலை நோக்கிய பாதையில் தலைமைத்துவப் பண்புகளின் பகிர்வோடு இலட்சியம் தாங்கிய உண்மையின் உழைப்புக்காக உயர்வுபெற்றுநிற்பதை உலகமே உணர்ந்து, வியந்து நிற்கின்றது. அடிமைப்பட்டு மீண்டும் ஆர்ப்பரித்த தமிழினம் அடிமை விலங்குடைத்து சுதந்திரமான, சுபீட்சமான நேர்வுநிலை நோக்கிய வாழ்வுக்காக விலை மதிப்பற்ற உயிர்க்கொடைகளை ஈந்து முன்னோக்கியுள்ள வெற்றிகளில் எல்லாம் பெண்மையின் பங்கு சமனாகப் பகிரப்படுகின்றது.

மனிதராகப் பிறப்பெடுத்த ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு தனிப் பண்புகளைத்தாங்கி நிற்கும் வல்லமையானது ஆண், பெண் பேதமற்ற நிலை என்பதை உணர்ந்து கொண்ட எமதுதேச வரலாற்றுப் பதிவுகளினூடே தொடர்ந்தும் ஒவ்வொரு பெண்ணின் உயர்வுக்கும், நிமிர்வுக்கும் உழைப்போம் என இந்நாளில் கரம்பற்றி அணிதிரண்டு உறுதியெடுப்போமாக!

" அணியாய் நாம் கரம்பற்றிக் கொள்வோம், அனைவரும் உணரும் வகை வெல்வோம்."

"உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவனம்"
கிளிநொச்சி மாவட்டம்.



## தமிழீழ அரசியல்துறை மகளிர் பொறுப்பாளரின் வாழ்த்துரை...

சமூகத்தின் ஆக்க சக்தியாகவும் அதன் ஆதார சக்தியாகவும் விளங்குவது பெண்ணினம். பழமை என்றும், பண்பாட்டுக் கோலமென்றும், சடங்குகள் சம்பிரதாயங்கள் என்றும் காலம் காலமாகத் நம்மை ஒரு குறிப்பிட்ட வட்டத்துக்குள் மட்டுமே உரியவர்களாக எண்ணியிருந்த பெண்கள் இன்று அந்த வரையறைகளைக் கடந்து சமூகத்தில் தமக்கென ஒரு இடத்தை வரித்துக்கொண்டுள்ளனர்.

ஒரு சமூகம் அபிவிருத்தி அடைந்த சமூகமாக உருவாக வேண்டுமாயின் அதன் சனத்தொகையில் சரிபாதி இடத்தை வகிக்கின்ற பெண்கள் அபிவிருத்தி நடவடிக்கையில் ஈடுபட வேண்டும். எதிர்கால சந்ததியை ஆரோக்கியமான சந்ததியாக உருவாக்கின்ற ஆணை விடவும், பெண்ணுக்கே அதிகம் இருக்கின்றது. எனவே பெண்கள் ஆளுமை உள்ளவர்களாக இருக்க வேண்டிய கட்டுப்பாடு அவசியமாகின்றது.

பெண்ணினத்தின் முன்னேற்றப் பாதையில் சமூக பொருளாதார வாழ்வு மேம்படுத்தல் மிக வும் அவசியமானதொன்றாகும். அந்த வகையில் உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவனமானது பெண்களிற்கு தமது சொந்தப் பலத்தில் வாழ முடியும் என்ற நம்பிக்கையைக் கொடுத்துள்ளது. அனைத்துலகப் பெண்கள் நாளைக் கொண்டாடும் உழைக்கும் அபிவிருத்தி நிறுவனத்திற்கு எமது நல்லாசிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இந்நிறுவனம் மென்மேலும் வளர்ந்து பெருவிருட்சமாகிப் பல பெண்களுக்கு பலம்சேர்க்க எமது மனமுவந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தமிழினி,
பொறுப்பாளர்,
அரசியல்துறை
மகளிர்,
தமிழீழம்.



## தமிழர் புனர்வாழ்வுக்கழக நிறைவேற்றுப் பணிப்பாளரின் அகத்திலிருந்து...

இன்று அனைத்துலக பெண்கள் நாள். ஒடுக்கப்பட்ட உலகப்பெண்ணினம் உரக்கக் குரல் கொடுக்கும் உன்னத நாள். பெண்கள் உரிமை வேண்டி உலக மனச்சாட்சிகளிடம் தம் கோரிக்கைகளை விண்ணப்பிக்கும் நாள்.

தம்மை அறியாது, தம் பலம் உணராது பொய்த்திரைகளினுள் முகம் புதைத்து மீளவும் முடியாது, வாழவும் முடியாது தவிக்கும் உலகப்பெண்ணினத்திற்கு முன்னுதாரணமாக வழிகாட்டலாக திகழும் தமிழீழப் பெண்களின் வீரத்திற்கும், ஈகத்திற்கும் விடுதலை உணர்வுக்கும் நிகரில்லை.

சமூகம் போட்ட புள்ளிக்குள் நின்று புழுங்கிய நிலைமாற்றி சமத்துவ ஒளியேற்றி தம்மில் படர்ந்திருந்த இருளகற்றி விடுதலை ஒளியில் பிரகாசித்து நிற்கும் ஈழப் பெண்களின் நிமிர்வுக்கும் விடிவிற்கும் வழிசமைத்த பெருமை எமதுதேசியத் தலைவர் அவர்களுக்கே உரியதாகும்.

ஒப்பற்ற தியாகங்களாலும், ஈடுஇணையற்ற வெற்றிகளாலும், வளர்ந்து பரந்து விசாலித்து நிற்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் வளர்ச்சிக்கும், தாயகத்தின் எழிற்சிக்கும், ஈழப் பெண்களின் பங்கு அளப்பரியது. நாற்கவருக்குள் முடங்கி நீர் கோர்த்த விழிகளுடன் அடங்கி வாழ்ந்த எமது சமூகப் பெண்களை ஆற்றல் பெற்று உலகில் அதிசயம் படைக்கும் சக்திகளாக மாற்றியமை எமது விடுதலைப் போராட்டம் படைத்த பெரும் சாதனையாகும்.

நிமிர்ந்த ஞானசெருக்குடன் தலைவர் வழியில் கம்பீரநடை போடும் ஈழப் பெண்ணினம் அனைத்துத் தாளைகளில் இருந்துவிடுபடவும், தாயகம் விடுதலை பெறவும், அயராது உழைக்கும் சகலதுறைகளிலும் வளர்ந்தும், உலகில் எதற்கும், எவருக்கும் சளைக்காத சக்தியாக நிமிர்ந்தும், நம்பிக்கையுடன் வாழ்வை எதிர் கொள்ளும் நாளை படைக்கும் வரை ஈழப்பெண்கள் மட்டுமல்ல தமிழினமே ஒன்றுபட்டு, ஒருமித்து ஒருகுடையின் கீழ் நின்று உரிமைக்காய் அயராது பாடுபடுவோம் என இந்நாளில் உறுதியெடுப்போம்.

உலகப் பெண்கள் நாளில் பெண்கள் உரிமையை நிலைநாட்டவும், விடுதலைவேண்டிக் குரல்கொடுக்கவும், எழிற்சி பெற்றுநிற்கும் ஈழப்பெண்களிற்கு ஆதரவுவளித்து நிற்கும் தமிழர் புனர் வாழ்வுக் கழகத்தின் பங்காளி நிறுவனமான உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவனத்திற்கும் எனது பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

கே.பி.றெஜி,
நிறைவேற்றுப்பணிப்பாளர்,
தமிழர் புனர்வாழ்வுக்கழகம் .

பெண்கள் சமஉரிமை பெற்று சகல அடக்குமுறைகளிலிருந்தும் விடுதலை பெற்று ஆண்களுடன் சமத்துவமாக-கௌரவமாக வாழக்கூடிய புரட்சிகரச் சமுதாயமாக தமிழீழம் அமைய வேண்டும் என்பதே எனது ஆவல்.

தமிழீழத் தேசியத் தலைவர்
மேதகு.வே.பிரபாகரன்



## சிந்தனைக்கு

இயற்கை எனது நண்பன்; வாழ்க்கை எனது தத்துவாசிரியன்; வரலாறு எனது வழிகாட்டி.

தமிழீழத்தேசியத் தலைவர்.


# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

யாழ். சாலை, கிளிநொச்சி. 08 -03-2004


## சுயநலமே அடிப்படை

சுயநல நோக்கத்திற்கான அரசியல் பிரதேசவாதத்தினைக் கிளப்புவது அரசியலுக்கு ஒன்றும் புதியதொன்றல்ல. கருணாவும் இதனையே செய்துள்ளார். விடுதலைப்புலிகளின் மட்டு-அம்பாறை மாவட்டங்கள் புறந்தள்ளப்படுவதாக அவர் தெரிவித்துள்ள குற்றச்சாட்டு அர்த்தமற்றதொன்று. மட்டு-அம்பாறை விசேட தளபதி ரமேஸ் குறிப்பிட்டது போன்று இது ஒரு நகைப்பிற்கிடமானதே ஆகும்.

இவ்விடயத்தில் மட்டு-அம்பாறை மாவட்டங்களை விடுதலைப்புலிகளின் தலைமைப்பீடம் ஓரம் தள்ளியதா? என்பதை ஆராய்வதற்கு முன்னர் தனிப்பட்ட ரீதியில் கருணா தொடர்பான விடயத்தையே எடுத்துக் கொள்வோம். அதாவது கருணா எவ்வேளையிலாவது விடுதலைப்புலிகளின் தலைமையினாலோ அன்றி வடக்கிலுள்ள விடுதலைப்புலிகளின் துறைசார் பொறுப்பாளர்களினாலோ அன்றிப் போராளிகளினாலோ புறந்தள்ளப்பட்டாரா?

கருணா தமிழீழத் தேசியத் தலைவரின் மிகவும்நம்பிக்கைக்குப் பாத்திரமாக இருந்தவர். யுத்தம் உக்கிரமாக இருந்த வேளையில் தேசியத் தலைவருக்கு அடுத்த நிலையில் இருந்து யுத்தத்தை வழிநடத்தியவர். அதாவது தேசியத் தலைவர் அவர் மீது கொண்டிருந்த நம்பிக்கை காரணமாக தமக்கு அடுத்த படியான நிலைக்கு அவரை உயர்த்தினார்.

இதேவேளை வடக்கில் உக்கிரமாக நடந்த யுத்தத்தின் போது அவர் தனியாக மட்டு-அம்பாறைப் போராளிகளைக் கொண்ட ஜெயந்தன் படையணியை மட்டும் வழிநடத்தவில்லை. விடுதலைப்புலிகளின் பல படையணிகளையும் வழிநடத்தியுள்ளார். பல தளபதிகளுக்கும் கட்டளை பிறப்பித்தவர். அவ்வேளையில் எவருமே அவரது கட்டளைக்குப்பணியாமலோ அன்றி மாறுபட்டோ இருந்துள்ளார்களா?

அதுமட்டுமல்ல, விடுதலைப்புலிகளின் சகலமட்டத்திலும் அதாவது மூத்ததளபதிகள், துறைப்பொறுப்பாளர்கள் மற்றும் போராளிகள் ஆகியோராலும் பொதுமக்களாலும் அன்பாகவும், ஆதரவாகவுமே நடத்தப்பட்டவராகவும் அதாவது அவருக்கு உரியதொரு கௌரவம் கொடுக்கப்பட்டே வந்துள்ளது.

இதற்கும் மேலாக யுத்தம் ஓய்ந்து அவர் மட்டு-அம்பாறை மாவட்டத்தில் தமது செயற்பாட்டிற்குத் திரும்பிய போது அதற்கான முழு அளவிலான ஒத்துழைப்பும் விடுதலைப் புலிகளின் தலைமையினால் கொடுக்கப்பட்டதாகவே இருந்தது. அதாவது படையணிகளுக்குரிய அனைத்துத் தேவைகள் உதவிகள் தொடர்ச்சியாக வழங்கப்பட்டதாகவே இருந்து வந்துள்ளது.

இதைத்தவிர மட்டு-அம்பாறைப் பிரதேசத்தில் இராணுவ-அரசியல் மற்றும் துறைசார்ந்த பொறுப்பாளர்களை அவரே நியமனம் செய்யும் அளவிற்கு அவருக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டிருந்தது. மட்டு-அம்பாறை மாவட்டத்திற்கென வடக்கில் இருந்து எவருமே பொறுப்பாளர்களாக அனுப்பப்பட்டதாக இல்லை.

வடக்கைச் சார்ந்தவர்களை அவரும் நியமித்ததும் இல்லை. இவையாவற்றிற்கும் மேலாக சமாதானப் பேச்சுவார்த்தையில் கருணாவிற்கு அளிக்கப்பட்ட முக்கியத்துவமானது கிழக்கு மாகாணத்தை பிரதிபலிக்கும் நோக்கத்துடனேயே ஆகும். அதாவது சமாதானப் பேச்சுவார்த்தையில் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் கலந்துகொண்டாலும் அவர் வடக்கைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாகக் கொள்வதற்கில்லை. அவர் தமிழர் தாயகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துபவராகவே இருந்தார். அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அவர்கள் வடக்கைப் பிரதிநிதித்துவப்படுத்துவர் எனக் கருதின் அது அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அவர்களின் பூர்வீகம் அறியாத கருணாவின் சிறுபிள்ளைத்தனமான அறிவிப்பாகவே இருக்கும். இந்நிலையில் கருணா மட்டுமே ஒரு பிராந்தியத்தை அதாவது கிழக்கைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கென, சேர்த்துக் கொள்ளப்பட்டவராகும். அது மட்டுமல்ல கிழக்குத் தொடர்பான பிரச்சினைகள் பேசப்பட்டபோது கருணாவிற்குப் போதியதான முக்கியத்துவமும் அளிக்கப்பட்டிருந்தது. அதாவது கிழக்குத் தொடர்பாக சிறிலங்கா அரசுமற்றும் முஸ்லிம் தரப்பினருடன் நடத்தப்பட்ட பேச்சுக்கள் முடிவுகள் என்பனவற்றில் கருணாவின், பங்கு உயர்ந்ததாகவே இருந்தது.

இந்நிலையில் மட்டு-அம்பாறை புறந்தள்ளப்படுவதாகவும், வடக்கிலுள்ளவர்களே ஆதிக்கம் செலுத்துகின்றனர் எனக் கருணா குற்றம் சாட்டுவது எந்தளவு பொருத்தப்பாடானது? கருணா தனது சுயநலத்திற்காக தமிழ் மக்களிடையில் பிளவினை ஏற்படுத்துவது எந்த வகையில் ஏற்றுக்கொள்ளக் கூடியது?

கருணாவிற்கு விடுதலைப் புலிகளின் தலைமையும், விடுதலைப் புலிகள் அமைப்பும், தமிழ் மக்களும் கொடுத்த முக்கியத்துவத்திற்கும், அவர் மீது வைத்திருந்த நம்பிக்கைக்கும் அவரின் தற்போதைய நடவடிக்கையானது துரோகம் இழைப்பதாகவுள்ளது. அத்தோடு கருணா தனது தற்போதைய முடிவை யார் தூண்டுதலில் எடுத்திருப்பினும் அது விடுதலைப்புலிகளுக்கு மட்டுமல்ல, தமிழ்த் தேசியத்திற்கும் இழைக்கப்பட்ட துரோகமாகவும், காட்டிக்கொடுப்பதாகவுமே கொள்ளத்தக்கதாகும்.

# சமாதானம், அரசியல் ஸ்திரத்தன்மையிலேயே நாட்டின் பொருளாதார வளர்ச்சி தங்கியுள்ளது

## -உலக வர்த்தக நிறுவனம் அறிவுறுத்து

(கொழும்பு)

நாட்டில் சமாதானம் அரசியல் ஸ்திரத்தன்மை பேணப்படும் பட்சத்தில் சிறிலங்காவின் பொருளாதார அபிவிருத்தி சாதகமான முறையிலேயே அமையும் என உலக வர்த்தக நிறுவனம் தெரிவித்துள்ளது.

சிறிலங்காவின் வர்த்தகக் கொள்ளைகள் நடைமுறைகள் ஆகியன தொடர்பாக உலகவர்த்தக நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் அரசாங்கத் தலையீடற்ற சீர்திருத்தங்கள் தொடர்ந்தும் அமுல் செய்யப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொலைத்தொடர்பு சேவைகள், நிதிச்சேவைகள், போக்குவரத்துச் சேவைகள் போன்ற முக்கிய சேவைகள் திறமையாக நிர்வகிக்கப்படாமையினால் பொருளாதாரம் மொத்தத்தில் பெரும் தாக்கத்திற்கு உள்ளாகியுள்ளதென்று உலக வர்த்தக நிறுவனத்தின் அறிக்கை மேலும் தெரிவித்துள்ளது.

பொருளாதாரம் பயனுள்ள வகையில் விருத்தி செய்யப்படுவதற்கு சேவைகள் துறை நவீனமயப்படுத்தப்படுவது அவசியம் என்றும் வலியுறுத்தியுள்ளது.

# சுகாதார சேவையில் தொடரும் பிரச்சினைகளுக்கு அமைச்சின் செயலாளரே காரணகர்த்தா

## -மருத்துவ அதிகாரிகள் சங்கம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

சுகாதார சேவையில் அடிக்கடி ஏற்படும் பிரச்சினைகளுக்கும், முரண்பாடுகளுக்கும் சுகாதார அமைச்சின் செயலாளர் ரெஜி பெரேராவே காரணகர்த்தாவென்று குற்றம் சாட்டியுள்ள மருத்துவ அதிகாரிகள் சங்கம் இது தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபை, உலக சுகாதார நிறுவனம் ஆகியவற்றிடம் முறையிடப் போவதாக அறிவித்துள்ளது.

அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செய்தியாளர் மாநாடு வெள்ளிக்கிழமை நடைபெற்ற போதே இந்த முடிவு வெளியிடப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சுச் செயலாளர் மேற்கொள்ளும் நடவடிக்கை தொடர்பாக சனாதிபதி, பிரதமர் உட்பட சம்பந்தப்பட்ட தரப்பினர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மருத்துவா சன்ன பெரேரா வலியுறுத்தியுள்ளார். அத்துடன் ஐ.நா.சபை, சுகாதார ஸ்தாபனம் ஆகியவற்றிடம் இதுபற்றி முறையிட தமது சங்கம் தீர்மானித்துள்ளதாகவும் கூறியுள்ளார்.

அதிகாரிகளே ஒவ்வொரு துறைகளிலும் தேவையற்ற பிரச்சினைகளை உருவாக்குவதாக குறிப்பிட்ட இவர், இவ்வாறான செயற்பாடுகளால் அப்பாவி ஏழை மக்களே பாதிக்கப்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளார்.

# இராணுவப் பாதுகாப்பு அளிக்கக்கோரும் வேட்பாளர்களுக்கு அதனை வழங்கப் பணிப்பு

(கொழும்பு)

தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் யாராவது இராணுவப் பாதுகாப்புக் கோரும் பட்சத்தில் அதனை வழங்குமாறு சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இராணுவத்தளபதிக்கு உத்தரவிட்டுள்ளார்.

சனாதிபதியின் இந்த உத்தரவை அடுத்து தமது உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்று அஞ்சும் வேட்பாளர்களுக்கு பாதுகாப்பு அளிக்கவுள்ளதாக இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார்.

சனாதிபதியின் இந்த அறிவித்தலானது ஒரு விசேட அறிவித்தலாகவே உள்ளமை குறிப்பிடத்தக்கது. ஏனெனில் வேட்பாளர்களுக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்படுவதே வழமையானதாகும்.

இதேவேளை முன்னர் வெளியான அறிவித்தலில் பொதுத் தேர்தலில் போட்டியிடவுள்ள சகல வேட்பாளர்களுக்கும் பொலிஸ் பாதுகாப்பே வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டிருந்தமை தெரிந்ததே.

# மதவழிபாட்டுத் தலங்கள் தாக்கப்படுவதை தடுக்க பொலிசார் தவறிவிட்டனர்

## -பொது அமைப்புக்கள், கல்விமான்கள் விசனம்

(கொழும்பு)

கடந்த வருடம் 100இற்கும் அதிகமான கிறிஸ்தவ மத வழிபாட்டுத் தலங்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ள போதிலும் இத்தாக்குதல்களை மேற்கொண்டோர் மீது பொலிசார் உரிய நடவடிக்கை எடுக்கத் தவறி விட்டனர் என்று விசனம் தெரிவிக்கப்பட்டிருப்பதுடன் இந்நிலை தொடருமானால் 1983 இல் ஏற்பட்ட நிலையே ஏற்படும்.

இவ்வாறு 35 அரசசார்பற்ற பொது அமைப்புக்கள் மற்றும் கல்விமான்கள் இணைந்து அறிக்கை வெளியிட்டுள்ளார்கள். இவ் அறிக்கையில் மதங்களுக்கிடையிலான சமாதான முன்னணி, யுத்தத்திற்கெதிரான தேசிய இயக்கம், தேசிய சமாதானப் பேரவை போன்ற 35 பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், கொழும்பு பல்கலைக் கழகப் பேராசிரியர்கள், முன்னாள் அமைசசர்கள், முன்னணி நபர்களும் கையெழுத்திட்டுள்ளார்கள்.

இவ்வறிக்கையில், மதங்களுக்கிடையே ஏற்பட்டுள்ள வன்முறைச்கண்டித்ததுடன், மேலும் மதவழிபாட்டுத்தலங்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்கள் சம்பவங்கள் குறித்து செய்யப்பட்டுள்ள முறைப்பாடுகளைப் பொலிசார் புலன் விசாரணை செய்வதில் மெத்தனப் போக்கைக் கடைப்பிடித்து வருகின்றனர். எனவே இத்தாக்குதல் சம்பவங்கள் தொடர்பாக விசாரணைகள் துரிதப்படுத்தப்பட வேண்டும், இதேவேளை அரசியலமைப்பிலும், சர்வதேச மனித உரிமைகள் சாசனங்களிலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளை நிலைநாட்டுவதற்கு சனாதிபதியும் பிரதமரும் சட்டத்தை அமுல்ப்படுத்தும் அமைப்புக்களும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அந்த அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

# பந்துவீச்சு தரவரிசையில் முரளிதரன் முதலிடத்திற்கு முன்னேற்றம்

டெஸ்ட், மற்றும் சர்வதேச ஒருநாள் போட்டிகளின் பந்து வீச்சு தரவரிசையில் சிறிலங்கா அணியின் சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் முதலிடத்தில் உள்ளார். ஒருநாள் துடுப்பாட்டத்தில் கிறிஸ் ஹைறலும் டெஸ்ட் துடுப்பாட்டத்தில் பிறைன் லாறாவும் முதலிடத்திடத்தில் உள்ளார்கள்.

இதேவேளை ஒருநாள் பந்து வீச்சில் ஷோன் பொலக் சமிந் தவாஸ் இரண்டாம், மூன்றாமிடங்களிலும், டெஸ்ட் போட்டிகளில், சொகிப் அக்தர், ஷோன்பொலக்கும் இரண்டாம் மூன்றாமிடங்களிலுள்ளார்கள்.

ஒருநாள்த் துடுப்பாட்டத்தில் சச்சின டெனண்டுல்கர், ரிக்கி பொணடிங் இரண்டாம், மூன்றாமிடத்திலும், டெஸ்ட் துடுப்பாட்டத்தில் ரிக்கிபொண்டிங் ராகுல் ராவிட் இரண்டாம், மூன்றாமிடங்களிலுள்ளார்கள். இத் தரப்படுத்தலை பிரைஸ் வாட்டர்ஸ் கௌஸ் கூப்பேர்ஸ் நிறுவனம் வெளியிட்டுள்ளது.




# வெற்றியை இலக்காகவைத்து களம் இறங்குவோம்

## -பாகிஸ்தான் அணித் தலைவர்

'வெற்றியை மட்டுமே இலக்காக வைத்து இந்தியாவுக்கு எதிரான தொடரில் களமிறங்குவோம்' இவ்வாறு பாகிஸ்தான் அணித்தலைவர் இன்சமாம் திட்டவட்டமாகக் கூறியுள்ளார்.

பாகிஸ்தானின் முன்னாள் தலைவரான இம்ரான்கான், வசிம் அக்ரம் ஆகியோரின் ஆலோசனைகளால் பாகிஸ்தான் அணியில் பெரும் மாற்றம் ஏற்பட்டுள்ளது. இந்தியாவுக்கு எதிரான போட்டிகளில் பதற்றமடைய மாட்டோம் என்றும், லாகூரில் கடாபி மைதானத்தில் பாகிஸ்தான் அணி பயிற்சியில் ஈடுபட்டிருந்த வேளை அணித்தலைவர் செய்தியாளர்களிடம் சனிக்கிழமை கூறியுள்ளார்.

## தனது...

அம்பாறை மாவட்டங்களில் இருக்கின்ற நிலைமைகள் சம்பந்தமாக அறிகின்றபொழுது நிறைய கிராமப்புறத்து மக்களுக்கு என்ன நடைபெறுகின்றது என்பது பற்றித்தெரியாமல் இருக்கின்றது. இந்தமக்களுக்கு தெளிவில்லாமல் இருக்கின்றது.

கருணா குறிப்பிட்ட ஆட்களை அனுப்பி அவருடைய கருத்தினைத் தெரிவிக்கும் பொழுது அதைச் சிலர் நம்பிக்கொண்டிருக்கின்றார்கள். நாங்கள் தற்பொழுது தெளிவாக சில விடயங்களை அவரது குற்றச்சாட்டு என்ன என்பதனை விரிவாகச்சொல்லும் பொழுது இப்படியா நடந்திருக்கு. அவர் தேசத்துரோகி என்று பெருமளவில் மக்கள் சொல்லுகிறார்கள்.

**அங்குள்ள போராளிகள் குறித்து?**

அங்குள்ள போராளிகள் நிறையப்பேர் குழப்பமடைந்து போயுள்ளார்கள். தேசியத்தலைவரின் படத்தை கழற்றிவிட்டு அதனை வைக்கக்கூடாது என்று கருணா சொன்னதன் பிறகு, நாங்கள் தேசியத் தலைவரை நம்பித்தான் இயக்கத்துக்கு வந்தோம், தேச விடுதலைக்காக வந்தோம். இதென்ன கேவலமான, கீழ்த்தரமான வேலை என்று போராளிகள் குழம்பிப்போயுள்ளதாக தொடர்புகள் மூலம் தெரியவருகிறது.

மற்றும் போராளிகள் மட்டுமல்ல கருணாகூட ஒருதளம்பல் நிலையிலேயே இருப்பதாகத் தெரியவருகிறது. ஏற்கனவே தளம்பலாகத்தான் இருக்கிறது. நேரத்திற்கு ஒரு முடிவு, ஒரு தளம்பலான கருத்துக்கள், இதனால் பொறுப்பாளர்கள், போராளிகள் பெரும் சோர்வடைந்த நிலையிலேயே உள்ளார்கள்.

ஏனெனில் தற்பொழுது நாங்கள் வன்னிக்கு வந்தது போன்று எல்லோரும் வரமுடியாது. நாங்கள் குறிப்பிட்ட தளபதிகளே வந்தோம். நாங்கள் இப்பொழுது முடிவினைத்தெரியப்படுத்தியுள்ளோம். அடுத்த கட்டம் இப்ப கருணா மக்களை பகடக்காய்களாக பயன்படுத்தாமல், போராளிகளை அழிவுக்குள் விழவிடாமல் விட்டுக்கொடுப்பது தான் சாலச்சிறந்தது. அல்லது இவர் தொடர்ந்தும் பிடிவாதமாக, மக்களுக்குப் பிழையான அறிவுறுத்தலைக் கொடுத்து போராளிகளைப் பயன்படுத்துவாராக இருந்தால் நாங்கள் அந்த மக்களுக்கு சரியான தெளிவுகளையூட்டி போராளிகளுக்கும் எந்தப்பிரச்சினையும் வராத அளவிற்கு அங்கு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு எங்களிடம் திட்டம் இருக்கின்றது.

**தற்போது கருணாவால் போராட்டங்கள் நடத்தப்படுவதாகவும் மேலும் நடாத்த திட்டமிடுவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. அது குறித்து உங்கள் கருத்து?**

இது கருணாவுடைய ஒரு தனிமனிதனுடைய ஆத்திரத்தை, அவருடைய உணர்ச்சி வசப்படுத்தப்பட்ட தன்மையை மக்கள் மத்தியில் ஒரு குறிப்பிட்ட சிலரை அனுப்பி அவருடைய கருத்துக்களை மையமாக வைத்து தன்னை நியாயப்படுத்தி மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய விதத்தில் தன்னை நியாயப்படுத்தி பலாத்காரமாகத் தான் இந்த நடவடிக்கையை மேற்கொள்ளப்பட்டு வருவதாக நாம் நம்புகின்றோம்.

**இந்த சமாதான காலத்தில் அதாவது தமிழ் மக்கள் ஒட்டுமொத்தமாக ஓரணியில் நிற்கின்றோம் என்று தேர்தலில் எடுத்துக்காட்ட முனைகையில் ஏன் இப்படி இவர் நடந்து கொண்டார் என நீங்கள் கருதுகிறீர்கள்?**

நான் நினைக்கிறேன் அவர் விட்ட பிழைமிகவும் பாரதூரமானது. இதிலே தலைவர் கடுமையாக முடிவெடுப்பாரென்று ஒரு பயத்தின் காரணத்தினால் தன்னைக் காப்பாற்றுவதாக இப்படியான ஒரு முடிவை எடுத்திருக்கிறார் என்பது தான் உண்மை இருக்கலாம்.

**கருணாவுக்கு இவற்றில் அரசியல் நோக்கம் இருப்பதாகக் கருதுகிறீர்களா?**

சில வேளையில் பின்னணியில் இருக்கலாம் அவற்றை இவ்விடத்தில் குறிப்பிட விரும்பவில்லை.

**தற்போது ஏற்பட்டுள்ள சூழ்நிலையில் கிழக்கு மாகாணங்களுக்கு நீங்கள் என்ன தெரியப்படுத்துகின்றீர்கள்?**

நாங்கள் இந்த கருணாவினுடைய தனிப்பட்ட ரீதியான சுயநலப்போக்கினை மக்களுக்கு தெளிவுபடுத்திக் கொண்டிருக்கின்றோம்.

மட்டக்களப்பு அம்பாறை மாவட்டத்தில் உள்ள புத்திஜீவிகள், மதத்தலைவர்கள், பல்கலைக்கழக அறிஞர்கள், அப்படியானோர்களுடன் தொடர்பு கொண்டு இந்த உண்மையான விடயங்களை அங்குள்ள அப்பாவி மக்களுக்கு கிராமப்புற மக்களுக்கு தெளிவுபடுத்தி கருணாவின் இந்தத்துரோகத்தனத்தினை தெளிவுபடுத்தி அவரை புறக்கணித்து அவரை மக்கள் மத்தியில் இருந்து வெளியே அனுப்புவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம்.

**அங்குள்ள மக்களிடம் இருந்து எதனை எதிர்பார்க்கின்றீர்கள்?**

மக்களின் உண்மை விடயம் என்னஎன்பதனை அறிந்து கொள்ள வேண்டும் என்பதே.

**தேர்தல் காலத்தில் அதாவது இன்னும் 25 நாட்களில் தேர்தல் நடைபெறவுள்ளது. இதில் மக்களை தளம்ப விடாது அங்கு முழுமையான பிரதிநிதித்துவத்தை பெற்றுக் கொள்வது பற்றி உங்களது பணி?**

அதாவது இந்தத்தேர்தலில் எந்த அளவிற்கு வெற்றி அளிக்கும் என்பது பற்றி இந்த இடத்தில்உறுதியாக கூறிக்கொள்ள முடியாது. ஏனெனில் கருணாவினுடைய இந்தத்திட்டமிட்ட சதி சிலவேளைகளில் தேர்தலில் கூட ஒரு குழப்பத்தினை ஏற்படுத்துவதாகவும் சந்தேகிக்கக் கூடியதாக இருக்கிறது.

**இதனை அங்கு முறியடிப்பதற்கான வழிவகைகள் முயற்சிகள் ஏதாவது மேற்கொண்டிருக்கின்றீர்களா?**

இதனை நாங்கள் தொடர்ந்து வலியுறுத்திக்கொண்டிருக்கின்றோம். அவருடைய திட்டம் அப்படியாக இருந்தாலும் நாங்கள் அங்கிருக்கும் புத்திஜீவிகள், அறிஞர்கள், ஏனைய மக்களுக்கு தெளிவுபடுத்திக் கொண்டிருக்கின்றோம்.

இதுஒரு தனிமனிதனுடைய பிரச்சினை. எங்களுடைய தேச விடுதலைக்காக அனைத்துத் தமிழ் மக்களும் ஒன்றிணைந்து எங்களது அரசியல் வெற்றியினை சர்வதேசத்துக்கு காட்டவேண்டும். அதற்காக அனைவரும் இந்தத் தேர்தலிலே ஒரு பாரிய வெற்றியை ஈட்டுவதற்காக ஒத்துழைக்க வேண்டும் என்று அதை நாங்கள் தொடர்ந்து குறிப்பிட்டுக்கொண்டிருக்கின்றோம்.

**இது விடயமாக கூட்டமைப்பு வேட்பாளர்களின் நிலை குறித்து?**

நாங்கள் இது விடயம் சம்பந்தமாக கூட்டமைப்பு வேட்பாளர்களுடன் தொடர்பு கொள்ளவில்லை. ஏனெனில் இந்தத்தேர்தலுக்கு அங்குள்ள மக்கள் எப்படி முகம்கொடுப்பது பற்றிய விளக்கங்களைத் தான் நாங்கள் குறிப்பிட்டுக் கொண்டிருக்கின்றோம். இதனை அரசியல் துறைப்பொறுப்பாளரிடம் தான் கேட்கவேண்டும்.

**அங்குள்ள போராளிகளை கருணாதடுத்து வைத்திருப்பதாக செய்திகள் வெளிவந்துள்ளது. அது குறித்து?**

அவர் தனது தவறுகளை மூடிமறைப்பதற்காக ஒரு பிரதேச வேறுபாட்டினைத் தோற்றுவித்து போராளிகளே இந்த முடிவை எடுத்ததாகவும் மாவட்டம் இந்த முடிவை எடுத்ததாகவும் காட்டுவதற்கு முற்பட்டுள்ளார் இதற்காக போராளிகளை கட்டாயப்படுத்தி ஆயுதமுனையிலே அங்குபல வேலைகளை மேற்கொள்வதாக எங்களுக்குத் தகவல் வந்துள்ளது.

**இன்றைய நிலைமை குறித்து தமிழீழ மக்களுக்கு என்ன கருத்துக் கூறவிரும்புகிறீர்கள்?**

இது ஒரு தனிமனிதப் பிரச்சினை, மாவட்டப் பிரதேச பிரச்சினையல்ல. ஒரு தனி மனிதன் இதை பிரதேசவாதமாக வெடுத்து இந்த மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட மக்களுக்கு சர்வதேச ரீதியாக ஒரு களங்கத்தை ஏற்படுத்தியுள்ளார். எனவே அந்த தனிமனிதனுக்குரிய முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. அவரை நாங்கள் விரைவாக வெளியகற்றுவோம். அடுத்த கட்டத்தில் எங்களுடைய தமிழீழ மக்கள் மற்றும் சர்வதேசத்தில் வாழுகின்ற தமிழ் மக்களும், அனைவரும் நாங்கள் ஒன்றாக ஒருங்கிணைந்து தலைவருக்கு பக்கபலமாகவிருந்து எங்களது விடுதலையை நாங்கள் பெறவேண்டும் என்பதனைத்தான் கூறிக்கொள்ள விரும்புகிறேன் எனத்தெரிவித்தார். இதேவேளை சக்தி தொலைக்காட்சியின் "மின்னல்" நிகழ்ச்சிக்கு வழுங்கிய பேட்டியில் அவர் தெரிவித்ததாவது

**கருணா அரசியல் துறைப்பொறுப்பாளர் அவர்களுடன் வெளிநாடு சென்று வந்தார். அங்கிருந்து வருகின்றபொழுது அவரின் நடவடிக்கைகளிலே மாற்றம் ஏற்பட்டதா அல்லது திடீர் என்று ஏற்பட்ட மாற்றம் என நீங்கள் கருதுகிறீர்களா?**

இது திடீரென ஏற்பட்ட விபத்து மாதிரித்தான் நாம் அறிந்தோம். ஏனென்றால் அங்கு அவருடைய கட்டளைகளை ஏற்று செயற்பட்டுக்கொண்டு இருந்தோம். அதை விரிவாகக் கூறுவதானால் மக்களுடைய பிரச்சினை என்றாலும் சரி போராளிகளுடைய பிரச்சினை என்றாலும் சரி பெரும்பாலான அவருடைய நிர்வாக ஒழுங்கு முறைகள், பிரச்சினைகளை தீர்ப்பதெல்லாம் நேரடியாக எங்களுடைய கட்டுப்பாட்டிற்கு கீழ்த்தான் அங்கு இருந்தது.

**களத்திலே பல போராட்டங்களிலே முன்நின்று யுத்தத்தை நடாத்தியவர் கருணா என்று ஒரு கருத்து இருக்கிறது. இதை நீங்கள் எந்தவகையில் ஏற்றுக்கொள்கிறீர்கள்?**

தாக்குதல்கள் என்பதை நான் விரிவாகச்சொல்லலாம் என்று நினைக்கிறேன். தமிழீழத்தின் பல பகுதிகளுக்கும் சென்று தாக்குதல்களை நடாத்திய தளபதிகள் இருக்கிறோம். ஆனால் இந்தத்தாக்குதல் திட்டம் என்பது நேரடியாக எங்களுடைய தலைவராலேயே போடப்படுகிறது. எங்களுடைய இயக்கத்திற்குரிய இராணுவத்தளபதி எங்களுடைய தேசியத்தலைவர் தான். ஒவ்வொரு தாக்குதலுக்கும் எமது தேசியத்தலைவரே திட்டமிடுவார். அந்தத்திட்டங்களைக் கொண்டு இப்படித்தான் செய்வது என்று செயற்படுத்துவதற்கு அடுத்த தளபதி இருப்பார். அதே போன்று கட்டம் கட்டமான தளபதிகள் இருக்கின்றார்கள். ஒட்டுமொத்தத் திட்டங்களெல்லாம் எமது தலைவராலேயே போடப்படுகின்றது. சண்டை வெற்றி என்பது கூட்டு வெற்றி. தலைவர் திட்டத்தைப்போடுவார் அது அடுத்த தளபதிகளுக்கு பங்கீடு செய்து கொடுக்கப்படும். படைகள் நகர்த்தப்படும். களத்தில் நிற்கும் துருப்புக்கள் சண்டை பிடிக்கும் அவர்களுடைய செயற்பாட்டுக்கு அமைவாக இதிலே குறிப்பாக சொல்லுவதாக இருந்தால் சிறிய தளபதிகளும் பொறுப்பாளர்களும் தான் இந்தச் சண்டை வெற்றிக்குக் காரணம். ஏனென்றால் நிறையப்போராளிகள் இந்தத் தாக்குதல்களையெல்லாம் பல வெற்றிகளை சாதனைகளைப் படைத்து வீரச்சாவைத் தழுவிக்கொண்டார்கள். என்னைப் பொறுத்த மட்டில் தளபதிகள் சாதித்தது என்று சொல்லுவது தவறு என்றுதான் சொல்லுவேன்.

தலைவர் திட்டத்தை வகுப்பார் ஒவ்வொரு சண்டைக்கும் என்னென்ன வளங்களை எப்படிப் பயன்படுத்துவது என்பது தலைவரது முடிவு இந்தவகையில் அனைத்துவளங்களையும் ஒருங்கிணைத்து தந்திரோபாயங்களாகக் கொடுப்பது எங்களுடைய தேசியத்தலைவர். அது வழமையானது.

**தற்போது தமிழ்க் கூட்டமைப்புத்தான் இலங்கையில் வரவிருக்கும் பாராளுமன்ற ஆட்சியைத் தீர்மானிக்கும் என்ற நிலைமை ஏற் பட்டுள்ளது தமிழ் மக்களும் ஒருமித்த குரலில் தமது கருத்தை தெரிவிக்க வேண்டும் என்று விடுதலைப் புலிகளும் கருத்து வெளியிட்டு இருந்தனர். தற்பொழுது கிழக்கில்ஏற்பட்டுள்ள குழப்பம் இன்றுமக்கள்மத்தியிலேயே ஒரு குழப்பத்தை ஏற்படுத்தியிருக்கிறது. இது என்ன பலாபலனை ஏற்படுத்துமென நீங்கள் எதிர்பாக்கிறீர்கள்?**

பொதுவாக நாங்கள் பார்க்கும் போதுஇது உண்மையிலேயே மக்கள் மத்தியில் மனதில் ஒரு குழப்பம் ஒன்று ஏற்பட்டுள்ளது அங்கிருக்கின்றபுத்திஜீவிகள் அரசியல் கட்சிசார்ந்தவர்கர்களிடத்தில் கூட பல குழப்பங்கள் ஏற்பட்டுள்ளது. உண்மையிலேயே பிளையானதொரு, ஒருவராலும் ஏற்றுக்கொள்ள முடியாததொரு முடிவு என்னைப் பொறுத்தமட்டில்அதுஒரு துரோகமான முடிவு. எதிர்கொள்ளப் போகிற தேர்தலிலேசனநாயக அடிப்படையில் மக்கள் கலந்து கொள்ளவேண்டும்.

## மக்களையும்...

வலியுறுத்தியே இந்தப் போராட்டத்தில் நாங்கள் அரசியல் போராட்டத்தில் ஈடுபட்டு வந்திருக்கின்றோம்.

அண்மையிலே நடைபெற்ற பொங்குதமிழில் கூட புலிகளே தமிழர், தமிழரே புலிகள் என்று தேசியத்தலைவரின் உருவப் படத்தையும் தாங்கிச்சென்ற பலலாயிரக்கணக்கான மக்களின் மனதில் இருக்கின்ற அந்த நினைவையும், அந்த உணர்ச்சியான தலைவரினுடைய பற்றையும் ஒருபோதும் அழிக்க முடியாது என்பது எங்களது அசைக்க முடியாத நம்பிக்கை.

ஆகவே இது தனிமனித பிரச்சினைக்காக மக்களை பலிக்கடாக்களாக்கி ஆயிரக்கணக்கான போராளிகளையும் பலிக்கடாவாக்குவாராகவிருந்தால் கருணா ஒரு"பொல்பொட்" ஆக மாறுவார் என்பதில் எந்த வித சந்தேகமும் இல்லை.

ஆகவே இந்த முடிவுக்கு விரைவிலே ஒரு தீர்வு கொண்டு வரப்பட்டு தமிழ்த் தேசியத்தை ஏற்றுக்கொண்டு எல்லா மக்களும் செயற்படுகின்ற ஒரு சூழ் நிலையை நாங்கள் உருவாக்குவோம் என்பதை நம்பிக்கையோடு உங்களுக்கு தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன் என்றார்.


### ஐந்தாம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 10 □ 10 □ 1944



மறைவு 04 □ 03 □ 1999

**அமரர் திரு.முருகேசு சுவாமிநாதன்**
**உடையார்கட்டு வடக்கு**
**முன்னாள் கிராமசேவையாளர்**
**திதி: 09.03.2004**

எமது இதயங்களில் குடிகொண்டிருக்கும் எமது அன்புத் தெய்வமே. எம்மைவிட்டு ஐந்தாண்டுகள் ஆகிவிட்டதையா. உங்களைப் பிரிந்த துயரை எண்ணித் தினமும் கலங்கித் தவிக்கின்றோம். உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். எதிர்வரும் 9ஆம்திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறும் மதிய போசனத்தில் உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்:
(மனைவி மங்களம்)
மைத்துனர் பத்மநாதன் குடும்பம்.
மைத்துனி யோகராசா குடும்பம்.



### பாராட்டி வாழ்த்துகின்றோம்



சாவகச்சேரி நீதிமன்ற நீதவான் திரு. பி.சுப்பிரமணியம் அவர்கள் முன்னிலையில் 03.10.2003திகதி திரு.பொ. பத்மநாதன் அவர்கள் சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார். இவர் பிறந்த இடம் மட்டுவில் கிழக்கு சாவகச்சேரி. தற்போது வட்டக்கச்சியில்நிரந்தரமாக வாழ்ந்து வருகிறார். இவர் பரந்தன் இரசாயனதொழிற்சாலை இயக்குனராகவும் வட்டக்கச்சி கி.அ.சங்க முன்னாள் தலைவராகவும் கரைச்சி கிழக்கு ப.நோ.கூ.சங்க பொதுச்சபை உறுப்பினராகும். இவர் ஓர் சமூக சேவையாளர் ஆகும். ப.இ.தொ ஊழியர்களும் வட்டக்கச்சி மக்களும் பல்லாண்டு காலம் வாழ பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பதிவு இல.2003/04/வ.கி/சவா/A./158
ப.இ.தொ.ஊழியர்களும்
வட்டக்கச்சி மக்களும்.

(சி.9410)


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 08 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.